7-6-1952 M.M BANGALORE 2

போர்வாள்

வாள் 5 வீச்சு 36

7-6-52 சனிக்கிழமை

ஆசிரியர்கள்:

காஞ்சி. மணிமொழியார்

மா. இளஞ்செழியன் B.A.Hons

துணை ஆசிரியர்:

காஞ்சி. கல்யாணசுந்தரம்

விலை அணா 2

அரசியல் உலகிலே........!

கடவுளுக்கு ஒரு வக்கீல்!

ஆண்டவனை சர்வ சர்வ சக்தி படைத்தவன் என்கிறார்கள். அவன் நினைத்தால் ஆகாதது ஏதொன்றுமில்லை என்கிறார்கள் அவனன்றி ஓரணுவும் அசையாது என்றும் சொல்கிறார்கள். ஆனால் ஆண்டவனால் தன்னுடைய சக்தியும் செல்வாக்கும் எவ்வளவு என்பதை எடுத்து விளக்குவதற்கு மட்டும் சக்தி இல்லைபோல் தெரிகிறது அந்தச் சக்தி அவருக்கு இருந்தால் எதற்காகத் தன்னுடைய சார்பில் வாதாடுவதற்காகவென்று ஒரு வக்கீலை வைத்திருக்கப் போகிறார்!

அது யாரப்பா அது ஆண்டவனுடைய வக்கீல் என்று கேட்கிறீர்களா? இது தெரியவில்லையா உங்களுக்கு? ஸ்ரீமான் பஜகோவிந்தம் என்கிற காரணப் பெயரை அடைந்திருக்கிறாரல்லவா உயர்திரு குல்லூக பட்டர் அவர்கள், அவர்தான் ஆண்டவனுடைய வக்கீலாக நியமிக்கப் பட்டிருக்கிறார் என்று இப்போதுதான் நமக்குத் தெரியவந்திருக்கிறது.

இந்தச் செய்தி உமக்கு எப்படித் தெரியும்—நீர் எப்போது ஆண்டவனைப் பேட்டி கண்டீர் என்று கேட்கிறீர்களா?

நாமாவது ஆண்டவனைப் பேட்டி காண்பதாவது? அதெல்லாம் ஒன்றுமில்லை. ஸ்ரீலஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகளே அருள் கூர்ந்து தெரிவிக்கிறார் இந்தத் திவ்யமான தகவலை.

“கடவுள் இல்லை என்ற அறிவு வியாதிக்கு மருந்து கொடுக்கவே நான் முதல் அமைச்சராக இருக்கிறேன்” என்றும், “எனது இலாகா கடவுள் இலாகா—அதில் மற்ற எல்லா இலாகாக்களும் அடங்கும்” என்றும், “தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள அபாயம் கடவுள் இல்லை என்ற அபாயம். இந்த அபாயத்திலிருந்து மக்களைக் காப்பாற்றவே நான் வந்திருக்கிறேன்” என்றும் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார் திருவாளர் ஆச்சாரியார்.

கடவுளைக் காப்பாற்றவே இவர் முதலமைச்சராக வந்திருக்கிறாராம். கடவுளுடைய சக்தி எவ்வளவு, அவருடைய திறமை எப்படிப்பட்டது என்பதையெல்லாம் ரொம்பமக்களுக்கு எடுத்துக் காட்டவே இவர் அரசியல் அதிகாரத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறாராம்! கோயம்புத்தூரில் சென்றவாரம் ஒரு காங்கிரஸ் பொதுக்கூட்டத்தில் பேசும்போது இப்படித் தெரிவித்திருக்கிறார் மாம்பலத்து மஹரிஷியார்!

மாஜி வக்கீல் ஆச்சாரியாருடைய வாதத்திறமையால் காப்பாற்றப்படவேண்டிய அவ்வளவு கேவலமான நிலையிலேயா இருக்கிறது கடவுளுடைய சக்தி?—என்று கேட்கிறீர்களா?

கடவுளுடைய சக்தி அவ்வளவு குறைவானதல்ல, ஆனால் ஆச்சாரியார் அப்படி எண்ணிக்கொண்டிருக்கிறார் பாவம்! கடவுளுடைய சக்தியைவிட தன்னுடைய சக்தி அதிகம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்! தன்னுடைய சக்தி, எவ்வளவு என்பதைத் தானே தெரிவித்துக்கொள்ளுகிற ஆற்றல் கடவுளுக்குக் கிடையாது என்று அவர் நம்பிக்கொண்டிருக்கிறார்!

ஆச்சாரியாரே! உமக்கு ஒரு வார்த்தை! உம்முடைய வாதத் திறமையால்தான் நிலைத்தாக வேண்டும் என்கிற கேவலமான நிலையில் கடவுள் இல்லை! தன்னைக் காப்பாற்றிக் கொள்ளத்

(16-ம் பக்கம் பார்க்க)

நாடகத்தைத் தடுக்காதே! உரிமைகளைப் பறிக்காதே!

ஆட்சியாளர்களுக்குச் சாட்டையடி

நீதிமன்றத்தின் நல்லதீர்ப்பு

★

கடைவீதிக்குப் போன தங்கப்பன் வீட்டிற்குத் திரும்பி வந்தான்.

வந்தபோது அவன் கையில் ஓர் அழகான புட்டி இருந்தது.

தெருவிலேயே நின்றுகொண்டிருந்தாள் அவன் தங்கை நிர்மலா.

அண்ணனைக் கண்டதும் ஓடோடிச் சென்று, என்ன அண்ணா கையிலே என்று கேட்டுக்கொண்டே அவன் கையிலிருந்த புட்டியை வாங்கிப் பார்த்தாள்—புட்டி நிறைய தேன்!

வாயிலே கொஞ்சம் ஊற்றிப் பார்த்தாள் — தேன், திவ்யமாக இருந்தது.

தேன் புட்டியை எடுத்துக்கொண்டு உள்ளே ஓடினாள் வேகமாக.

அம்மா அம்மா என்று கூவினாள்.

அம்மா வந்தார்கள்.

"ஏண்டி நிர்மலா, ஏன் கூப்பிட்டாய்?"

"ஏன்? இதோ பாரம்மா! தேன்! அற்புதமான தேன்!"

"தேனா? ஏது?"

"அண்ணன் வாங்கி வந்தது. கொஞ்சுண்டு சாப்பிட்டேன். ஆநந்தமாக இருக்குமா!"

"அப்படியா? எனக்குக் கொஞ்சம் கொடு"

சிறிதளவு தேனைச் சுவைத்தார்களோ இல்லையோ, அம்மாவின் முகத்திலே ஆநந்தம் கூத்தாடத் தொடங்கிவிட்டது.

இந்த மாதிரி தேனைப் பார்த்து அடே அப்பா எவ்வளவு காலமாகிவிட்டது என்று சொல்லிக்கொண்டே தேனை மேலும் மேலும் விழுங்கலானார்கள் அம்மா.

குடும்பத்தார் அத்தனை பேரையும் தங்கப்பன் வாங்கி வந்த தேன் தன் வயமாக்கிவிட்டது.

எனக்குக் கொஞ்சம், எனக்குக் கொஞ்சம் என்று ஒவ்வொருவரும் போட்டி போடத்தொடங்கிவிட்டார்கள்.

தேவாமிர்தம்என்கிறார்களே அது இப்படித்தான் இருக்கும்போலிருக்கு என்றார் குடும்பத் தலைவர்.

மெரினா ரோட்டிலே ரோல்ஸ் ராய்ஸ் காரிலே போனா எவ்வளவு இன்பம் இருக்குமோ அவ்வளவு இன்பம் ஏற்படுது இந்தத் தேன் சாப்பிட்டா என்றாள் மூத்த பெண்.

எல்லோருமே தங்கப்பனை வெகுவாகப் பாராட்டினார்கள்.

தேன் என்றால் இதுவல்லவா தேன் என்று கூவினார்கள்.

சாமான் வாங்குவது என்றால் இப்படியல்லவா வாங்கவேண்டும் என்று தங்கப்பனைத் தட்டிக் கொடுத்தார்கள்.

குடும்பமே குதூகலமாகக் காட்சி அளித்தது.

அனைவருடைய முகத்திலும் ஓர் அலாதி ஆநந்தம், அனைவருடைய உள்ளத்திலும் ஒரு புதுவித இன்பம்,

எல்லோருடைய உள்ளமும் இப்படி ஆநந்தத்தால் துள்ளிக் குதித்துக்கொண்டிருந்த நேரத்தில் அந்த வீட்டில் ஒரே ஒரு உள்ளம் மட்டும் பொறாமைத் தீயால் புழுங்கிச் செத்தது.

தங்கப்பனுடைய அண்ணன் உள்ளம் அது.

எல்லோரும் இப்படி தன் தம்பியை ஒரேயடியாகப் புகழ்வது அவனுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை.

எப்படியாவது தம்பிக்குக்கெட்ட பெயரைக் கற்பிக்கவேண்டுமென்று அவன் பிரமாதமாக யோசனை செய்தான்.

இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தான்.

அன்று இரவு எல்லோரும் உறங்கியபிறகு, ஒரு துண்டுக் காகிதத்தை எடுத்தான். "இது விஷம் யாரும் தொடக்கூடாது" என்று சிகப்பு மையால் அந்தக் காகிதத்தின்மீது பட்டை பட்டையாக எழுதினான்.

எழுதிவிட்டு தேன் புட்டியை எடுத்தான். புட்டிமீது அந்தக் காகிதத்தை அழுத்தமாக ஒட்டிவிட்டான்.

பொழுது விடிந்தது,

முன் நாள் சாப்பிட்ட தேனைப் பற்றியே இரவு முழுவதும் இன்பக் கனவுகண்டுகொண்டிருந்த நிர்மலா தேன் புட்டியைத் தேடி ஓடினாள்.

புட்டியைப் பார்த்ததும் திடுக்கிட்டு விட்டாள்.

"இது விஷம். யாரும் தொடக் கூடாது."

எழுத்துக்கள் அவளை மிரட்டின, பயந்து பதறி அலறித் துடித்து ஓடியே போய்விட்டாள் அவள்.

எல்லோருமே பயந்துவிட்டனர்.

அது விஷம்தான்—விஷமேதான் —என்று எச்சரிக்கை செய்தான் அண்ணன் மறுபடியும்.

விஷம் எங்கேயாவது இனிக்குமா, என்ன அண்ணா மிரட்டுகிறாய்? என்று எதிர்த்துக் கேட்டான் தங்கப்பன்.

யுண்டாப்பா தங்கப்பா? உனக்கு என்னடாப்பா தெரியும்? அது ஒரு மாதிரி விஷமாச்சேடா! பார்த்தால் தித்திக்கும். ஆனால் சாப்பிட்டாலோ உயிரைக் கொல்லும் என்றான் அண்ணன்.

"நேற்று எல்லோரும் சாப்பிட்டோமே—யாருக்கும் உயிர்போக வில்லையே?" கேள்விக்குறியை வீசினான் தங்கப்பன்.

"நேற்று சிறிதளவுதான் சாப்பிட்டீர்கள். அதிகமாகச் சாப்பிட்டால் ஆபத்து நிச்சயமாக வரும்". முற்றுப்புள்ளி போட்டான் அண்ணன்.

அண்ணன் கூறிய வாசகத்தைக் கேட்டுக் குடும்பமே திடுக்கிட்டு விட்டது. யாருக்கு எந்த ஆபத்து எந்த நேரத்தில் நேருமோ என்ற பீதி ஒவ்வொருவரையும் பிடித்துக் குலுக்க ஆரம்பித்துவிட்டது.

ஒருவேளை இதில் விஷம் ஏதாவது கலந்திருக்குமோ என்று தங்கப்பனுக்கே கூட இலேசாக ஒரு சந்தேகம் ஏற்படலாயிற்று.

"அப்படியானால் இதிலே விஷம் ஏதோ கலந்திருக்கிறதென்று நீ நிச்சயமாக நம்புகிறாயா அண்ணா?" தங்கப்பன் கேட்டான்.

"ஆமாம்!"

அழுத்தந் திருத்தமாக வந்தது விடை.

"நீ என்னமோ சொல்லுகிறாய் ஆனால் என்னால் நம்பமுடியவில்லை. சாப்பிட்டுப் பார்த்தால் அசல் தேனாகத்தானே இருக்கிறது" என்று கூறிவிட்டு, தங்கப்பன், "எதற்கும் அண்ணா, பக்கத்துத் தெருவிலே டாக்டர் பரந்தாமன் இருக்கிறாரல்லவா, அவரிடம்கேட்டு வோம் வா, என்ன சொல்லுகிறார் பார்ப்போம்" என்றான்.

"டாக்டர் எதற்கப்பா தம்பி? நான்தான் சொல்கிறேனே போதாதா?" அண்ணன் கேட்டார்.

"ஆயிரம் இருந்தாலும் நீ டாக்டர் ஆவாயா அண்ணா? அந்தத் துறைக்கு அவர்தானே நிபுணர்? வா அண்ணா! அவரிடம் போவோம்! இது விஷமா தேனா என்பதைப் பரிசோதித்துவிடுவோம்!"

இப்படிக் கூறிக்கொண்டே தம்பி தங்கப்பன், தன் அண்ணனைக் கையோடு அழைத்துக் கொண்டு டாக்டர் பரந்தாமனிடம் போனான்.

பரந்தாமன் பார்த்ததுமே சொல்லிவிட்டார், இது விஷமல்ல, தேன் தானென்று.

சாதாரண தேனல்ல, மிகவும் அருமையான தேன். இப்படிப்பட்ட தேன் அடிக்கடி கிடைப்பதில்லை. மிகவும் அபூர்வமாகத்தான் கிடைக்கும் என்று வேறு டாக்டர் கூறிவைத்தார்.

அண்ணன் முகத்தில் ஈயாடவில்லை. பேசாமல் திரும்பிவிட்டான்.

இந்தச் சம்பவம் நடந்ததிலேயிருந்து; குடும்பத்தில் அண்ணனைப் பற்றியிருந்த நல்ல நம்பிக்கையும் நல்லெண்ணமும் வெகுவாகக் குறைந்துவிட்டது.

இதற்குப் பிறகு அவனுடைய பேச்சிலே யாருக்கும் அவ்வளவாக நம்பிக்கை பிறப்பதில்லை.

இந்த நிலைமை மாற்றத்தைத் தெரிந்துகொள்ளாமலே அவன், மறுபடியும், தங்கப்பன் ஏதாவது அருமையான தின்பண்டத்தை வாங்கி வந்த வேளையிலெல்லாம் அது விஷம் விஷம் என்று கூறி வந்தான்.

ஒவ்வொரு முறையும் தங்கப்பன் விஷம் என்று தூற்றப்பட்ட பண்டத்தைக் கையிலேந்திக் கொண்டு, அண்ணனையும் அழைத்துக் கொண்டு டாக்டரிடம் போவான்.

ஒவ்வொரு முறையும் அண்ணன் தலை குனிந்து கொண்டேதான் திரும்பி வருவான், ஏனெனில் டாக்டர் ஒவ்வொரு முறையும் தின்பண்டத்தில் விஷம் எதுவும் இல்லை என்றுதான் சொல்லி வந்தார்.

இப்படிப் பலமுறை டாக்டரிடம் குட்டுப்பட்டபிறகு கூட அண்ணனுக்குப் புத்தி வரவில்லை.

தம்பி மீதுள்ள பொறாமை காரணமாக அவன் வாங்கி வந்த பொருளையெல்லாம் விஷம் என்று தூற்றி, அப்படித் தூற்றிவந்த காரணத்தால் விஷ உள்ளம் படைத்தவன் என்ற கெட்ட பெயரையும் வாங்கிக் கொண்டான்.

பொறாமை பிடித்தவன்
விஷ உள்ளம் படைத்தவன்
வீண் துவேஷக்காரன்
பொய்யுரைக்கும் பித்தன்
பிறரை ஏமாற்றும் எத்தன்

என்று பலப்பல பட்டங்கள் அவனுக்குச் சூட்டப்பட்டன அக்கம் பக்கத்தவரால்!

என்றாலும் அவன், தன் தம்பியின் பொருள்களுக்கு வீணாகப் பழி சுமத்தும் படலத்தை மட்டும் கைவிட்டாரில்லை.

யார் அந்த அண்ணன்? எங்கே இருக்கிறது அந்தக் குடும்பம்? என்று கேட்கத் தோன்றும் வாசகர்களுக்கு.

சென்னை சர்க்கார்தான் அந்த அண்ணன்.

இந்த மாகாணப் பொதுமக்கள்தான் அந்தக் குடும்பம்.

தம்பி தங்கப்பன் என்பதுதான் திராவிட இயக்கம்.

திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், சென்னை மாகாணப் பொது மக்களுடைய வாழ்க்கையைக் கப்பிக்கொண்டிருக்கும் பழமை இருள் நீக்கவும், ஜாதிப்பித்தம் போகவும், தலைவிதி நம்பிக்கை தூள் தூளாகவும், மதவெறி அழியவும் பலப்பல முறைகளைக் கையாண்டு வருகிறார்கள்.

கவிதை
சிறுகதை
நாவல்
நாடகம்
சினிமா
இசையரங்கு
காலட்சேபம்
பத்திரிகை
பொதுக்கூட்டம்
மாநாடு

ஆகிய இப்படிப்பட்ட முறைகள், பழமைக் கோட்டைகளைத் தகர்க்கும் வெடிகுண்டுகளாக பயன்பட்டுவருகின்றன திராவிட இயக்கத்தவருக்கு.

திராவிட இயக்கத்தவரின் இடைவிடாத பிரசாரத்தால், இந்நாட்டில், பிராமணியத்தின் விஷப் பல் பிடுங்கப்பட்டிருக்கிறது. ஜாதி ஆணவத்தின் கொழுப்பு அடக்கப்பட்டிருக்கிறது. இதிகாச புராணங்களின் புரட்டு பொது மக்களுக்கு விளங்கியிருக்கிறது. எதற்கெடுத்தாலும் கடவுள் கடவுள் என்று அலையும்சோம்பேறித்தனம் குறைந்திருக்கிறது. தலைவிதியை நம்பி சொந்த முயற்சியைக் கைவிடும் குருட்டு மனப்போக்கு அழிந்துவருகிறது. சுருக்கமாகச் சொல்வதானால் திராவிட இயக்கம், மதமூட நம்பிக்கைகளையும் பிராமணிய விரியன் பாம்பை மண்டையிலடித்துக் கொன்று போட்டுவிட்டது.

இந்த ஒப்பற்ற நற்செயலைச் செய்துவருகிறதே தவிர திராவிட இயக்கம், ஒரே ஒரு நாள்கூட ஒரே

(6-ம் பக்கம் பார்க்க)

வாழ்க்கை வரலாறு :

முஸ்தாபா கெமால் பாட்சா

[காளமேகன்]

ஆணவக்காரன் இட்லரால் அழிவுற்ற ஜெர்மனி கூட கூறியது, துருக்கி ஐரோப்பாவின் நோயாளி நாடென்று! மூர்க்கன் முசோலினியால் முடிவிழந்துபோன இத்தாலியநாடும் கூறியது ஐரோப்பாவின் நோயாளி நாடு துருக்கி என்று! ஐரோப்பாவில் முதலாளிநாடு முதல் சின்னஞ்சிறு நாடுகள் வரை எல்லாம் கூறியது துருக்கிய நாடு நோயாளி நாடென்று! நோயாளிகளைத் திருத்த மருத்துவன்போல உதவியது யார்? நாங்கள் நோயாளிகளல்ல! என்று துருக்கியர் கூறுமளவுக்கு அவர்களை முன்னேற்றியவர் யார் என்று கேட்டால் முஸ்தாபா கெமால் பாட்சா என்று ஒவ்வொரு துருக்கியனும் கூறுவான். அவரின் வாழ்க்கை வரலாற்றை ஈண்டு நோக்குவோம்.

முஸ்தாபா கெமால் பாட்சா துருக்கியில் சலோனிகாவில் 1881-ஆம் ஆண்டு பிறந்தார். கெமாலின் தந்தையார் அல்பேனியா தேசத்தைச் சார்ந்தவர். தொழிலின் காரணமாக துருக்கிக்கு வந்தபொழுது அங்கே ஒரு மங்கையைச் சந்தித்தார். இரண்டு உள்ளங்களும் ஒன்றுபட்டன. அவர்கள் காதல் கலப்பு மணம் செய்து கொண்டார்கள், அவர்கள் காதல் வாழ்க்கையில் தோன்றியவரே கெமால்.

கெமால் சிறு வயது முதல் காலநிலையை அறிந்தொழுகும் இயல்பு பெற்றவராயிருந்தனர். இராணுவத்தில் சேர்ந்து நாட்டிற்குத் தொண்டு செய்யவேண்டும் என்று எண்ணினார். தந்தையின் அனுமதி கேட்டார். மறுக்கவில்லை—மகிழ்ச்சி கொண்டார் தனயனின் செய்கை கண்டு.

ஒரு நாள் அவர் இராணுவத்தில் இருக்கும் பொழுது 'பிரெஞ்சுப் புரட்சி' என்ற பெயருடைய புத்தகமொன்று அவருக்குக் கிடைத்தது. "பிரெஞ்சு நாட்டிலே ஆதி வம்சத்தாரும் மதகுருமாரும், பணம்பெற்றோரும் நடத்திய கொடுமைகளுக்கு அளவில்லை. மக்கள் விதியை நம்பி வீணர்களாயினர். வரிச்சுமை பொறுக்கமாட்டாமல் பொங்கி எழுந்தனர். அவர்களுக்கு அறிவு வளர காரணமாயிருந்தவர்கள் ரூசோ, வால்டேர் என்பவர்களாவார். அங்கேயிருந்த மக்கள் புரட்சி செய்தால் அவர்களை அடைத்து வைக்க பாஸ்டல் என்ற கொடுஞ்சிறை இருந்தது மக்கள் பாஸ்டில் என்ற பெயர் கேட்டதும் நடுக்கிடுவர். கொடுங்கோலர்களால் வளர்க்கப்பட்ட சிறை எது என்று கேட்டால் பாஸ்டில் என்று தான் சொல்வார்கள். வாலிபமுறுக்கோடு சென்றவன், சிறையை விட்டு வெளியேறும்போது வயதானவன் போல் காணப்படுவான். உண்ண உணவும், குடிக்க நீரும் கிடைக்காது. உடை கிடையாது. இடம் இருக்கிறது. இருந்து என்ன பயன்? வெளிச்சம் கிடையாது. சுத்தமான காற்று கிடைக்காது. இரத்தத்தைக் குடித்து எப்பமிடும் மூட்டைப் பூச்சு, கொய்ங்-கொய்ங் என்று சப்தமிடும் கொசு, நாகரீக உருவோடு இருக்கும் நச்சரவம் இவைதான் அந்த சிறையில் இருக்கும் பிராணிகள். மக்கள் பல நாள் சிந்தித்தனர். கடைசியில் பாஸ்டிலை கொளுத்திவிட்டார்கள். ஆயியையும் அவர் மனைவியையும் கொலை செய்துவிட்டார்கள். பல துன்பங்களுக்குப் பின் கடைசியில் பிரான்ஸ் குடியரசாயிற்று." இதுதான் அவர் அந்தப் புத்தகத்திலிருந்து அறிந்தது.

அவர் அந்தப் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருக்கும் போது அவர் ஆருயிர் நண்பர் காசிம் வந்தார். வருவது யாரென அறிய நிமிர்ந்து பார்த்தார்—திடுக்கிட்டார் காசிம். ஃபிரான்ஸ் (FRANCE) நாட்டு மக்கள் விட்ட கண்ணீர் அதிகமா—கெமால்விட்ட கண்ணீர் அதிகமா என்று அளவிட முடியாத அளவு கண்ணீர் வழிந்தோடியது. காரணம் ஃபிரான்ஸ்நாட்டு பணம் படைத்தோர் ஏழைகளை சாட்டை கொண்டு துன்புறுத்தியபோது அவர்கள் பட்ட துன்பங்களை எல்லாம் நூலில் படித்தபோது அழுதுவிட்டார். ஃபிரான்ஸில் அந்த அளவுக்குக் கொடுமைபுரியப் பட்டது. நம்நாடும் இந்நிலைக்கு ஆகிவிடுமோ? என்றுபயந்தார் முஸ்தாபாகெமால் பாட்சா. புத்தகத்தைப் படிக்கும் போது நமது கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தோடுகிறது. நேரிலே கொடுமைக்கு ஆளான மக்கள் என்ன நிலையடைந்திருப்பர் என அவர் எண்ணினார். இதிலிருந்து அவர் எல்லாநாட்டு புரட்சிவரலாறுகளையும் படித்துக்கொண்டுவந்தார்.

இராணுவத்தில் இருக்கும்போது கடமையைச் சரிவர செய்து வந்ததால் உயர்ந்தார். சாதாரண இராணுவ வீரனாக இருந்த அவர் சார்ஜென்ட் மேஜர் (SERGERNT—MAJAR) பதவிவரை உயர்ந்தார். துருக்கியில் இஸ்டான் புல் நகரத்தில் (ISTAN BUL CIUY OR CONSTANTINOPLE) அரசாங்க காரியாலயத்தில் உயர்தர அதிகாரியாக நியமிக்கப்பட்டார். அந்த காரியாலயத்தில் வேலைசெய்வோர் யாவரும் புரட்சி நோக்கம் உடையவர்களாயிருந்தார்கள். அதிகாரியாக இருந்த கெமால் என்ன செய்வாரோ என்ற காரணத்தால் இதயத் துடிப்பை அடக்கிவைத்துக் கொண்டார்கள். ஒருநாள்கெமாலே சுதந்திர உணர்ச்சி பெருகும்படி பேசினார். சுல்தானின் அக்ரமத்தையும், மங்கையின் புன் சிரிப்பும், மதுக் கோப்பையின் விளிம்புமே கெதியென என்னும் அதிகாரிகளின் எண்ணக்கோட்டையையும் சுட்டிச் சுட்டிப் பேசினார். எதிர்பாராதவிதமாக அங்கு வந்த சுல்தான் இதைக் கவனித்துவிட்டார். அதன் பலனாக சிறை வாழ்வை மேற்கொண்டார். எதிர்காலத்தில் துருக்கியை எந்நிலையில் செம்மைப்படுத்த ஆலோசனை செய்ய தகுதியான நேரம் கிடைத்தது என்று சிறைச்சாலை வாழ்க்கையைப் பற்றிக் கூறுகிறார்.

சில நாட்களுக்குப் பின் அவர் விடுதலையானார். அவருடைய உழைப்பின் உயர்வை அறிந்த அதிகாரிகள் டமாஸ்கஸ் (DAMASCUS) என்னும் நகரத்தில் ஒரு அதிகாரியாக கெமாலை நியமித்தார்கள். அவருக்கு உழைப்பில் ஊக்கமில்லை. இது தம்மை நாடு கடத்தும் முயற்சியே என எண்ணினார்.

வீணர்களின் வீழ்ச்சிக்குக் காரணமான முதல் மகாயுத்தத்தில் (1914-1918) ஜர்மனிக்குத் துணையாக துருக்கி சென்றது. சண்டையில் தோற்றது. அதன் காரணமாக பாலஸ்தீன், அரேபியா, மெசபொ

டோமியா முதலிய தன் சாம்ராஜ்ய நாடுகளை இழந்தது. துருக்கி நேச நாடுகளிடம் சரண் புகுந்தது. துருக்கியின் தலைநகரான கான்ஸ்டாண்டி நோபிள் நேச நாட்டினர் வசமிருந்தது. ஆகவே அங்கோராவில் (ANKORA) முஸ்தபா கெமால் பாட்சாவின் தலைமையில் மக்களாட்சி நிறுவப்பெற்றது. நேச நாடுகளுக்கு இச்செய்தியை அறிவித்தது துருக்கி!

நாட்கள் நகர்ந்தன. 1923 ஆம் ஆண்டு நேச நாடுகள் யாவும் அங்கோரா அரசியலை அங்கீகரித்துக் கொண்டன. புதிய துருக்கியில் அனடோலியாவும் (ANAToLIA) மார் மோரா கடலுக்கு அருகிலிருந்த ஜில்லாவும் (ASIAMINAR) கான்ஸ்டாண்டி நோபிளைச் சார்ந்த பகுதியும் அடங்கியுள்ளன.

முஸ்தபா கெமால் பாட்சா வெளிநாடுகளின் அரசியல் திட்டத்தை எல்லாம் கொண்டு வந்து முக்கியமானவற்றைத் தம் நாட்டு அரசியல் திட்டத்தில் எழுதிக்கொண்டார். எழுதிக்கொண்டதோடு மட்டுமல்லாமல் நடைமுறைக்கும் கொண்டு வந்தார். கெமால் ஆட்சி ஆங்கில மக்களாட்சி முறையைத் தழுவியது.

பணக்காரன் மனைவியானாலும், ஏழையின் மனைவியானாலும் அவர்களுக்கு சுல்தான் ஆட்சியில் வாக்குரிமை கிடையாது. கெமாலின் முயற்சியால் 1930 ஆம் ஆண்டு அவர்களுக்குவாக்குரிமை அளிக்கப்பட்டது. துருக்கியர் இன்பத்திற்காக பல மனைவிகளை மணந்தார்கள். அப்படி வாழ்க்கைப்பட்டவர்கள் துன்புற நேர்ந்தது. இதைக் கண்ட கெமால் ஒருவர் ஒரு மனைவிக்கு மேல் மணக்கலாகாது என திட்டம் தீட்டி அமுலுக்குக்கொண்டு வந்தார். யாவரும ஐரோப்பியர் போல உடையணிய வேண்டும். துருக்கிய பெண்கள் முகமூடியின்றி வெளிவரவேண்டும் என்று அறிவித்தார். அமெரிக்கா, ருஷ்யா போன்ற இடங்களில் பெண்களே விமான ஓட்டியாகவும் இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி அதுபோல வாழவேண்டும் என்று அறிவித்து பெண்களைப் பலதுறைகளிலும் சேர்த்துப் பயிற்சிபெறச் செய்தார். அடிமை முறை அறவே அழிதல் வேண்டும் என்றார். பெண்கள் எவருக்கும் அடிமையல்லவென்றும் இருவரும் சுதந்திரமாகத் திரியும் வானம்பாடி எனவும் அறிவித்தார். மதஸ்தாபனங்களை நாட்டிலிருந்தும் விரட்டியடித்தார். அரசாங்கத்திற்கும் மதத்திற்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. சுலபமாகப் படிப்பதற்காக புத்தகங்களை ரோமன் எழுத்துக்களில் அச்சிட வேண்டுமென்று அறிவித்தார். இன்று துருக்கிசென்று துருக்கியர்களைக் கவனித்தால் அவர்களைத் துருக்கியர் என்று எண்ணமுடியாது இவர்கள் ஐரோப்பியர் என்றுதான் எண்ணமுடியும். அந்த அளவுக்கு அவர்களை முன்னேற்றமடையச் செய்தவர் கெமால் பாட்சாதான். முதியோர்கள் அறிவுபெற கெமால் ஆட்சியில் முதியோர் கல்வி நிலையம் ஏற்படுத்தப்பட்டது. வைதீகத்தை நீக்கி விஞ்ஞானம் வளர வழி செய்தார்.

எல்லாம் நிறைவேறிய அவராட்சியில் பொருளாதாரம் வளர வழியில்லை. பல நாள் சிந்தித்தார். மக்கள் மதத்திற்காக ஏராளமான பணம் செலவு செய்கிறார்கள் என்பதறிந்த அவர் மதத்தை நாட்டிலிருந்து விரட்டினார். கலிபா என்ற மதகுரு நீக்கப்பட்டார். எந்தெந்த நாடுகள் துருக்கியை ஏளனம் செய்ததோ அந்த நாடுகள் எல்லாம் வியக்கும் வண்ணம் பொருளாதார நிலையை உயர்த்தினார். எந்திரத் தொழில், பிறநாட்டு வாணிபம் முதலானவை முஸ்தபா கெமால் பாட்சா ஆட்சியில் பெருகின.

துருக்கியர் அனைவரும் அறிவின் திறமையால் முஸ்தபா கெமால் பாட்சாவை அடாடர்க்(ATATURK) என்று அழைத்தார்கள். அதன் பொருள்'துருக்கியர் அனைவருக்கும் பிதா'வென்பதாம். இந்தப் பட்டப் பெயரை துருக்கியர் 1934 ஆம் ஆண்டு அவருக்கு அளித்தார்கள்.

மக்கள் வாழ்வே தன் வாழ்வெனக் கொண்டு உழைத்த துருக்கியர் தந்தை கெமால் பாட்சா 1938 ஆம் ஆண்டு உயிர் நீத்தார். துருக்கியர் அனைவரும் அவர் மறைவு கேட்டு ஆறாத்துயர் கொண்டார்கள். அவர் தன் முயற்சியின் பலனாக துருக்கி 2-ஆம் உலக யுத்தத்தில் எந்தக் கட்சியிலும் சேராது தனித்து நின்றது பாராட்டுக்குரியது. அவர் புகழ் வாழ்க! வெல்க அவர் குறிக்கோள்.

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

என்கிற வாசகம் சுவர்களிலெல்லாம் தீட்டப்பட்டிருந்தது.

பார்த்ததும் பதறி விட்டார் பண்டிதர். வடநாட்டு ஏகாதிபத்யத்திற்கு இவ்வளவு பெரும் எதிர்ப்பா என்று எண்ணி மலைத்து விட்டார்.

பத்திரிகைகளிலே இந்தச் செய்தி அப்போதே வெளியாகியிருந்தது.

கேரள நாட்டிலே வட இந்திய ஏகாதிபத்ய எதிர்ப்புணர்ச்சி திக்கெட்டிலும் தோன்ற ஆரம்பித்து விட்டது என்பதைத் தான் இந்தச் செய்திகளெல்லாம் நமக்குத் தெரிவிக்கின்றன.

ஆம்! கேரள நாடு, விழிப்புற்ற சிங்கமென இன்று வீறு கொண்டெழுந்து விட்டது.

வடநாட்டு ஆதிபத்யத்தை எதிர்த்தும் போர்க்கொடி உயர்த்தி விட்டது.

மார்வாடியே வெளியே போ என்ற வீர முழக்கமிடத் தொடங்கி விட்டது.

தனி நாட்டுக் கோரிக்கை இன்றைய தினம் செல்வாக்கு மிக்கதோர் முழக்கமாகி விட்டது கேரளத்தில்.

திராவிட நாடு தனி நாடாக அமையும் நாள் நெருங்கி வருகிறது என்பதைத் தான் இந்தக் கேரளம் உலகத்தாருக்கெல்லாம் அறிவிக்கிறது.

ஆம்! இது உண்மை! வெறும் புகழ்ச்சியில்லை!

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு விநாடிகூட, பிராமணர்கள் மீதோ அல்லது வேறு எந்த சாதியினர் மீதோ, தனிப்பட்ட முறையில், துளியளவு துவேஷத்தைக் கூட, மறந்துங்கூட பரப்பியது கிடையாது.

என்றாலும் ஆட்சியாளர்கள் திராவிட இயக்கத்தவரின் நற்செயல்கள் ஒவ்வொன்றினையும் வகுப்புத் துவேஷம் என்கிற தலைப்பின்கீழ் கொண்டுவந்து வேண்டுமென்றே விஷமத்தனமான தடை உத்தரவுகளைப் பிறப்பித்து வருகின்றனர்.

நாடகமா—நடிக்காதே என்கிறார்கள்.

புத்தகமா—எழுதாதே என்று கூறுகிறார்கள்.

கவிதைச் சுவடியா—வெளியிடுதல் ஆகாது என்று தடுக்கிறார்கள்.

பொதுக் கூட்டமா—இந்தா 144 என்று பிடிவாரம் கொடுக்கிறார்கள்.

இவ்வளவுக்கும் அவர்கள் காட்டுகிற ஒரே ஒரு காரணம், நம்முடைய பேச்சிலும் எழுத்திலும் வகுப்புத் துவேஷம் பொதிந்து கிடக்கிறது என்பதுதான்.

ஆனால் உண்மையில் நம்முடைய பேச்சிலோ எழுத்திலோ துளியளவாவது வகுப்புத் துவேஷம் இருக்கிறதா?

அதுதானில்லை.

இல்லை என்று நாம் மட்டும் கூறவில்லை.

நீதிமன்றம் கூறுகிறது.

நீதிமன்றம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் உட்பிரிவுகளில் ஒன்று அல்ல.

ஆட்சிப் பீடத்தாரால் நிர்வகிக்கப்படும் பொதுமன்றம் அது.

அங்கே திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு என்று எந்தவிதமான தனிச் சலுகையும் காட்டப்பட மாட்டாது.

எது நீதி என்கிற ஒரே ஒரு எடைக்கல்லைக் கொண்டுதான் அங்கே எந்தப் பிரச்சினையும் நிறுத்துப் பார்க்கப்படும்.

அப்படிப்பட்ட நடுநிலைப் பண்பு அமைந்த நீதிமன்றம் தெரிவிக்கிறது. நம்முடைய பேச்சிலும் எழுத்திலும் வகுப்புத் துவேஷம் இல்லை இல்லை என்று.

ஆரிய மாயை என்கிற ஏட்டை நாம தீட்டினோம்.

அதிலே வகுப்புத் துவேஷம் நிறைந்து கிடக்கிறது, ஆகவே அதனை யாரும் படிக்கக் கூடாது என்று தடை உத்தரவு போட்டனர் ஆட்சியாளர்கள்.

சென்னை உயர் நீதிமன்றத்திற்குப் போனோம்.

"ஆட்சியாளர்கள் இப்படிக் கூறுகிறார்களே, நியாயமா?" என்று கேட்டோம்.

"தவறு அவர்கள் கூறுவது. அதிலே வகுப்புத் துவேஷம் எதுவுமில்லை. யாரும் அதைப் படிக்கலாம்" என்று தீர்ப்பு அளித்தது நீதிமன்றம்.

ஆரிய மாயைத் தடை உத்தரவு இந்தத் தீர்ப்பால் தவிடு பொடியாகி விட்டது.

இதுபோலவே,

இலட்சிய வரலாறு—புத்தகம்,

கருஞ்சட்டை ஒழியவேண்டுமா?—புத்தகம்.

'திராவிட நாடு" இதழிலே வெளியான "வெள்ளி முளைக்க எட்டு ஆண்டுகள்" என்கிற கட்டுரை

ஆகிய ஒவ்வொன்றிலேயும் வகுப்புத் துவேஷம் இருக்கிறது என்று கூறினர் ஆட்சியாளர்கள்.

அந்தக் காரணத்தைக் காட்டி இலட்சிய வரலாற்றைத் தடைசெய்தனர். "கருஞ்சட்டை ஒழிய வேண்டுமா" என்கிற புத்தகத்தை எழுதியவர்மீது வழக்குத் தொடுத்தனர். திராவிடநாடு பத்திரிகை 3000 ரூபாய் ஜாமீன் கட்டியாக வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தனர்.

ஆனால் சென்னை உயர்நீதி மன்றம், ஆட்சியாளர்களின் இந்த நடவடிக்கைகள் அத்தனையையும் தவிடு பொடியாக்கி விட்டனர்.

இவற்றிலே எதிலேயும் வகுப்புத் துவேஷம இல்லை என்று கூறிவிட்டனர்.

தடை உத்தரவுகள் செல்லாது என்றும் தீர்ப்பு கொடுத்துவிட்டனர்.

நம் பேச்சிலும் எழுத்திலும் வகுப்புத் துவேஷம் இல்லை என்பதை நீதிமன்றம் அடிக்கடி எடுத்துக் காட்டி ஆட்சியாளர்களைக் குட்டியும் கூட அவர்கள் தங்களுடைய கோணல் போக்கைக் கைவிட்டார்களில்லை.

மேலும் மேலும் நம் பேச்சுக்கும் எழுத்துக்கும் தடை விதித்தபடியே தான் இருக்கிறார்கள்.

டாக்டர் தெளிவாகக் கூறுகிறார், தங்கப்பன் வாங்கிவந்த திண்டங்களிலே விஷம் இல்லை என்று.

ஆனாலும் அண்ணன், தன்னுடைய உள்ளத்தில் மூண்டிருக்கும் பொறாமைப் புயல் காரணமாக, தம்பி வாங்கிவரும் பண்டங்கள் அவ்வளவையும் விஷப் பொருள்கள் என்றே கூறி வருகிறான்.

நீதிமன்றம் அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறது நம்முடைய பேச்சிலோ எழுத்திலோ வகுப்புத் துவேஷம் இல்லை என்று.

ஆனாலும் ஆட்சியாளர்கள் இருக்கிறது இருக்கிறது என்று ஓயாமல் கூறிக் கொண்டே தடை உத்திரவுப் பாணங்களைத் தொடுத்தப்படி இருக்கிறார்கள்.

கதையிலே வரும் அண்ணனுக்கும் நம் நாட்டிலே இருக்கும் காங்கிரஸ் ஆட்சியாளருக்கு மிடையே என்ன வேறுபாடு இருக்கிறது?

* * *

- * **ஆரிய மாயை**
- * **கருஞ்சட்டை ஒழியவேண்டுமா?**
- * **திராவிட நாடு ஜாமீன்**
- * **இலட்சிய வரலாறு**

இந்த வழக்குகள் ஒவ்வொன்றிலேயும் நீதிபதிகள் ஆட்சியாளர்களுக்கு எதிராகத் தீர்ப்பளித்திருந்தும், அந்தத் தீர்ப்புகளைக் கண்டு தங்களுடைய தவறான போக்கைத் திருத்திக் கொள்ளவில்லை ஆட்சியாளர்கள்.

நடிகவேள் எம். ஆர். ராதாவின் இரத்தக் கண்ணீர், லட்சுமிகாந்தன் ஆகிய இரண்டு நாடகங்களையும் கரூர் எல்லைக்குள் இரண்டு மாத காலம் நடத்தக் கூடாது என்று கரூர் சப் மாஜிஸ்ட்ரேட் மூலம தடை உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது.

தடை உத்தரவு என்றதும் ராதா சுருண்டு விழுந்துவிடுவாரா என்ன?

சென்னை உயர்நீதி மன்றத்தில் சர்க்கார்மீது வழக்குத் தொடுத்தார்.

வழக்கம்போல வெற்றி நம் பக்கம்தான்.

குட்டு, இம்முறையும், வழக்கம் போல ஆட்சியாளர்களுக்கே கிடைத்திருக்கிறது.

வழக்கை விசாரித்த **நீதிபதி சோமசுந்தரம் அவர்கள்,** கீழ்க்கண்டபடி தீர்ப்பளித்திருக்கிறார்கள்:—

"இந்த நாடகங்கள் தென்னிந்தியாவில் பல இடங்களிலும் தடங்கலின்றி நடத்திக் காட்டப்பட்டு வருகின்றன. இவற்றை எவரும் ஆட்சேபித்

(10-ம் பக்கம் பார்க்க)

தலைமை நிலையம் தெரிவிக்கிறது!

திராவிட முன்னேற்றக் கழகத் தலைமை நிலையத்திலிருந்து இந்த வாரம் நமக்குக் கிடைத்துள்ள அறிக்கைகளைக் கீழே கொடுத்துள்ளோம். வாசகர்கள் கவனிக்க!

தி. மு. க. தினத்தாள் நிதி

நம் கழகம் நடத்தவிருக்கும் தினத்தாளுக்காக இதுவரைகிடைத்துள்ள நன்கொடைகள் வருமாறு:-

தி. மு. க. திட்டக்குடி	5	0
,, முக்கூடலை	5	0
,, மேட்டுப்பாளையம்	5	0
,, கல்லக்குறிச்சி	5	0
வின்செண்ட்.ஜெயபால், மதுரை	3	2
பச்சையப்பன், பட்டறை	5	0
தி. மு. க. அம்மையப்பன்	5	0
,, அத்திப்பாளையம்	5	0
,, ஏனல்முடு	5	0
,, இல்லிடைக்குறிச்சி	5	0
தஞ்சை பராமமூர்த்தி மூலம்	10	0
தி. மு. க. மூங்கில்பாடி	5	0
,, நாமக்கல்	5	0
,, பொட்டனேரி	5	0
M. கோவிந்தசாமி, தஞ்சாவூர்	5	0
இளங்கோ மன்றம், ராயப்பேட்டை	5	0
முத்து படிப்பகம், மதுரை	5	0
தி. மு. க. பாண்டியராசபுரம்	5	0
,, அய்யம்பாளையம்	5	0
,, கம்பம்புலிப்பட்டி	5	0
,, மாயவரம்	5	0
மாரிமுத்து, திருச்சி	1	0
தி. மு. க. தூத்துக்குடி	5	0
,, போடிநாயகனூர்	5	0
,, செல்லிக்குப்பம்	5	0
L. நடராசன், இடையூர்	2	0
தமிழ் மன்றம், திருச்சி	5	0
தி. மு. க. சென்னிமலை	5	0
K. K. நீலமேகம் குடந்தை	5	0
தி. மு. க. மேட்டுப்பாளையம்	5	0
அ. ச. ராஜு, பொள்ளாச்சி	5	0
நாராயணன், திண்டுக்கல்	3	0
தி. மு. க. திருவள்ளூர்	5	0
,, ஆர்க்காடு	5	0
,, கொண்டாலம்பட்டி	5	0
,, ஆனையம்பட்டி	5	0
,, லால்குடி	5	0
,, திருச்சி பீமநகர்	5	0
,, கோட்டூர்	5	0
,, பலக்கனூத்து	5	0
,, பள்ளப்பட்டு	5	0
,, ஸ்ரீரங்கம்	5	0
,, மதுராந்தகம்	5	0
,, மேற்கற்கண்டார் கோட்டை	5	0
,, தோகைமலை	5	0
,, வடுகப்பட்டி	5	0
,, சின்னாளப்பட்டி	5	0
,, திருப்புவனம்	5	0
,, அம்பாசமுத்திரம்	5	0
,, கல்லிடைக்குறிச்சி	5	0
,, மடத்தூர்	5	0
,, முகவூர்	5	0
,, மதுரை	5	0
,, திருப்பாதிரிப் புலியூர்	5	0
	264	2

ஈ. வி. கே. சம்பத்,
பொறுப்பாளர் தலைமை நிலையம்.

தேனீக் கலவர வழக்கு நிதி

முன்னைய வரவு	1054	14	0
தி.மு.க. கொடைக்கானல்	5	0	0
ஏ.தமிழ்மணி, நாடார்பட்டி	4	0	0
ந. தனுஷ்கோடி, திருமங்கலம்	1	0	0
ச. ஆர். ஆப்ரகாம், தேவாரம்	5	0	0
ஆர். விவேகானந்தன், திருமங்கலம்	5	0	0
தி. மு. க. நாமக்கல்	1	0	0
,, வீரப்பட்டி	1	0	0
இளங்கோ மன்றம், இராயப்பேட்டை	5	0	0
தி.மு.க. மதுராந்தகம்	25	0	0
,, பொதுக்கூட்டம், குடந்தை	6	0	0
,, திருவிடைமருதூர்	2	0	0
,, நாடகாப்பட்டி	1	9	3
வருசப்பட்டி	1	12	0
,, பொதுக்கூட்டம் சின்னாளப்பட்டி	10	6	9
சதாசிவம் மூலம், சின்னாளப்பட்டி	3	0	0
சில தோழர்கள் சின்னாளப்பட்டி	4	13	3
தி.மு.க. பொதுக்கூட்டம் அம்பாசமுத்திரம்	12	9	7
பரமசிவம், பத்தமடை	2	0	0
தி.மு.க. பொதுக்கூட்டம், முகவூர்	12	9	0
தி.மு.க. கிருஷ்ணபுரம்	1	4	0
தி.மு.க. பொதுக்கூட்டம், மதுரை	10	0	0
வீரபத்திரன், ராமநாதபுரம் மாவட்டம்	1	0	0
இராமலிங்கம், ,,	1	0	0
ரயில்வே தொழிலாளர், பகுதி	3	8	0
தி.மு.க. பொட்டனேரி	2	0	0
,, பொதுக்கூட்டம், கிழையூர்	2	8	0
திரு. அர்பர் சொக்கப்பாண்டியன்	1	0	0
மொத்த வரவு	1186	13	10

இரா. நெடுஞ்செழியன்
செயலாளர்
தேனீ நிதிக் குழு.

தி. மு. க.
தோழர்களுக்கு!

தி. மு. க. தலைமை நிலைய வெளியிட்ட "தீர்மானங்கள்" புத்தகம் அனைத்தும் செலவாகி விட்டபடியாலும், இரண்டாம் பதிப்பு வெளிவர இன்னும் 2, 3 வார காலமாகுமாதலாலும், புத்தகம் வேண்டும் தோழர்கள் "சட்ட திட்டங்கள்" புத்தகத்திற்கு மட்டுமே பணம் அனுப்பும்படி வேண்டப்படுகிறார்கள். "தீர்மானங்கள்" புத்தகத்திற்காக பணமனுப்பியவர்களுக்கும், இனி அனுப்புபவர்களுக்கும் தாமதமாகவே அனுப்பப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

C/o ஈ. வெ. கி. சம்பத்
பொறுப்பாளர்
தலைமை நிலையம்.

போர்வாள்

திராவிடர் வார இதழ்

சென்னை 7—6—52 சனிக்கிழமை

கேரள நாட்டில் திராவிட கீதம்!

"மத்திய சர்க்காரின் இந்த ஆண்டுப் பட்ஜெட்டைக் கவனமாகப் பரிசோதித்துப் பார்த்தால், மத்திய சர்க்கார், தென்னிந்தியாவை மாற்றாந்தாய் மனப்பான்மையில் நடத்துகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. தென்னிந்தியாவின் விவசாயம், வியாபாரம் ஆகியவற்றிற்கு வசதி செய்து கொடுக்காமல், வட இந்தியாவின் விவசாயம் வியாபாரம் ஆகியவற்றிற்கு பட்ஜெட் வசதி செய்து கொடுக்கிறது மத்திய சர்க்கார், டாடாக்களுக்கும் பிர்லாக்களுக்கும் அனுகூலம் அளிப்பதில் தான் விசேஷ கவனம் செலுத்துகிறது.'

எங்கிருந்து புறப்பட்டிருக்கிறது தெரியுமோ இந்த வீர கீதம்?

காஞ்சீபுரத்திலிருந்தா?

அல்ல—அல்ல.

திருவனந்தபுரத்திலிருந்து!

ஆம்! கேரள நன்னாட்டிலிருந்து கிளம்பியிருக்கிறது நம் உள்ளத்தைக் குளிர்விக்கும் இந்தத் திராவிட கீதம்.

"கேரள கௌமுதி", மிகப் பிரபலமான மலையாள தினசரி, திருவனந்தபுரத்திலிருந்து வெளிவருவது அந்தத் தினசரியில் தான், 25-5-52 அன்று, தலையங்கமாக வெளிவந்திருக்கின்றன நாம் மேலே பொறித்துள்ள வீர வாசகங்கள்.

வட நாட்டாரின் ஆதிக்க வெறியை தென்னாட்டின் மீது தங்களுடைய ஏகாதிபத்யத்தைத் திணிக்கும் அவர்களுடைய ஆணவப் போக்கை, ஓரே இந்தியா என்கிற தேசியத் திரைக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு அவர்கள் நடத்தி வருகிற சுரண்டல் சூதாட்டங்கள், ஒவ்வொன்றையும், மிகத் தெளிவாக விளக்கியிருக்கிறது, "கேரள கௌமுதி".

மத்திய சர்க்கார், தென்னிந்தியாவை மாற்றாந்தாய் மனப்பான்மையில் தான் நடத்துகிறார்கள் என்று "கௌமுதி", அழுத்தந் திருத்தமாகக் கூறுகிறது.

"வட நாட்டாருடைய சோப்பு வியாபார லாபத்தைக் கருதி, சிலோன் கொப்பரையின் இறக்குமதி வரியைக் குறைத்து, தென்னிந்தியாவில் கேரளாக்களைக் கஷ்டத்தில் சிக்க வைத்து விட்டார்கள் மத்திய சர்க்கார். தென்னாட்டில் உள்ள அநேக லட்சம் மக்களின் ஜீவிதத் தொழிலான கயிறு, விவசாயம் இவற்றைப்பற்றி நிதி மந்திரி ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை. ஆனால் அதே சமயத்தில் அவர், வட நாட்டிலுள்ள சணல் விவசாயத்தைப்பற்றி சத்தம் பேசியுள்ளார்".

இதுவும் "கேரள கௌமுதி"யின் குரல்தான்

தென்னிந்தியா என்றால் அலட்சியம் செய்கிறார்களாம் மத்திய சர்க்கார்.

வட இந்தியா என்றால் ஓடோடிப் பாடு படுகிறார்களாம்.

கூறுகிறது "கேரள கௌமுதி."

"கௌமுதி இன்று கூற முன் வந்துள்ள இதே உண்மையைத் தான் நாம் சென்ற பன்னிரண்டு ஆண்டுகளாகக் கூறி வந்திருக்கிறோம்.

நாம் இந்த உண்மையை எடுத்துக் கூறிய வேளைகளிலெல்லாம் இங்கே, ஒரு சிலர், "தமிழ் நாட்டிலிருக்கும் நீங்கள் மட்டும் தானே தென்னாட்டைச் சுரண்டுகிறது வட நாடு என்று வாய் ஓயாமல் பேசி வருகிறீர்கள். கேரளம், கன்னடம், ஆந்திரம்-அவைகளெல்லாம் கூடத் தென்னாட்டின் பகுதிகள்தானே! ஏன் அங்கெல்லாம் இப்படி ஒரு குரல் எழுந்திடக் காணோம்?" என்று கேட்டு வந்தனர்.

அவர்கள் அப்படிக் கேட்ட போதெல்லாம், "நிச்சயமாகப் புரட்சிக் குரல் அங்கெல்லாம் கூட எழுந்திடத் தான் போகிறது—ஆனால் கொஞ்சம் காலம் செல்லும் குரல் எழும்ப" என்று நாம் கூறிவந்தோம்.

நடவாத காரியம் என்று கேலி பேசினர் அந்த ஒரு சிலர்.

நடக்கத்தான் போகிறது என்றோம் நாம்.

வெறும் கனவு என்றார்கள் அவர்கள்.

எங்கள் கனவுகளிலே ஒன்று கூட பலிக்காமல் போனது கிடையாது என்றோம் நாம்,

வெறும் வார்த்தை ஜாலம்—காரியத்திற்குப் பயன்படாது என்கிறார்கள் அந்த சுய காரியப் புலிகள்.

"சொற் சிலம்பம் ஆடவில்லை நாங்கள். இந்தியத் துணைக் கண்டத்தின் சென்ற கால, இக்கால, எதிர்கால நிலைமைகளைக் கணக்குப் போட்டுத்தான் பேசுகிறோம்" என்றோம் நாம்.

நீங்கள் என்னதான் சொல்லுங்கள்—கேரளமோ கன்னடமோ உங்கள் பேச்சுக்குச் செவிசாய்க்கப் போவதே கிடையாது என்று தீர்த்துப் பேசினார்கள் அவர்கள்.

இதோ "கேரள கௌமுதி" பேசுகிறது. இப்போதென்ன சொல்கிறார்கள் அவர்கள்?

தென்னாட்டை அலட்சியம் செய்கிறார்கள் வடநாட்டார் என்று கூறியதோடு நிற்கவில்லை "கௌமுதி".

மேலும் எழுதுகிறது:—

"மத்திய சர்க்கார், வட நாட்டு சணல் விவசாயத்திற்குக் காட்டிய அக்கரையில் பத்தில் ஒரு பகுதியாவது தென்னாட்டுக் கேரளத்தின் கயிறு விவசாயத்தில் காட்டியிருந்தால் நிலைமை எவ்வளவோ சீர்திருந்தியிருக்கும். திருவிதாங்கூரில் உள்ள மானேசைட், இல்மனைட், ஆகிய உலோகத் தொழில்களின் வளர்ச்சியை, மத்திய சர்க்கார் நசுக்கிக் கொல்லுகிறது.

"இந்தக் காரணங்களால் தான் இந்தியாவை, விந்தியத்தின் வட பகுதியை ஆரியவர்த்தம் என்றும், தென் பகுதியை தக்காணம் என்றும் இரண்டு பகுதியாகப் பிரித்துத் தனி அரசு செலுத்த வேண்டுமென்று கூறுகிறோம். தென் இந்தியர்களின் நலனைப் பாதுகாக்க வேண்டுமானால், சென்னை, மைசூர், ஹைதராபாத், திருவாங்கூர் கொச்சி ஆகிய பகுதிகள் ஒன்று சேர்ந்து தென்னிந்தியக் கூட்டாட்சி நிறுவ வேண்டும்."

"திராவிட நாடு" பத்திரிகை அல்ல—"கேரள கௌமுதி", தமிழ் ஏடல்ல—மலையாள மொழி இதழ். சென்னையிலிருந்தோ செங்கற்பட்டிலிருந்தோ, வெளிவரும் தாள் அல்ல—கேரள நாட்டிலிருந்து புறப்படும் ஏடு! அது கூறுகிறது அழுத்தந் திருத்தமாக, தென்னிந்தியக் கூட்டாட்சி நிறுவத்தான் வேண்டுமென்று!

தென்னாடு சுரண்டல்காரர்களின் வேட்டைக்காடாகி விட்டது இன்று! இந்த இழிநிலை மாற வேண்டுமானால் தென்னாடு தனி நாடாகித் தீர வேண்டும் என்று எழுதியிருக்கிறது "கேரள கௌமுதி"

திராவிட நாடு என்கிற வாசகம் இல்லையே தவிர மற்றபடி நாம் எந்த வகையான தனிநாடு கேட்கிறோமோ அதே வகைத் தனிநாட்டைத் தான் கேரள இதழும் கேட்கிறது.

வேறுபாடு துளியளவும் இல்லை.

திராவிட நாடு திராவிடருக்கே—நாம் கூறுகிறோம்.

தென்னாடு தென்னாட்டவர்க்கே—"கௌமுதி" கூறுகிறது.

திராவிடத் தனிநாடு தேவை—நாம் முழக்கமிடுகிறோம்.

தெட்சணத் தனிநாடு தேவை—"கௌமுதி" கர்ஜிக்கிறது.

நம் குரலுக்கும் அதன் குரலுக்குமிடையே வித்தியாசம் ஏதும் காணோம். திராவிடநாடு பிரிவினைக் கோட்பாட்டை முற்றிலும் ஒப்புக் கொள்கிறது "கௌமுதி." தமிழர், தெலுங்கர், கன்னடர், கேரளர் ஆகிய நான்கு சாராரும் சேர்ந்து நிற்கும் ஒரு கூட்டாட்சி தேவை என்பதைத் தெளிவாக எழுதியிருக்கிறது அந்த ஏடு.

ஆனால் கேரளத்திலேயே வேறொரு சாரார் இருக்கிறார்கள். **கேரள சமதர்மக் கட்சி,** அவர்களுடையது. அவர்கள், தமிழகம்—கேரளம்—ஆந்திரம்—கருநாடகம் ஆகிய நான்கு நாடுகளும் சேர்ந்த ஒரு கூட்டாட்சி தேவை என்பதை இன்னமும் ஒப்புக் கொள்ளவில்லை. ஆனால் கேரள நாடு மட்டும் தனி நாடாக இருக்க வேண்டும் என்கிற வீர கீதத்தை அவர்கள் எழுப்பத் தொடங்கிவிட்டார்கள் சுதந்தர சமதர்ம கேரளமே எங்கள் இலட்சியம் என்று அந்த வீர வாலிபர்கள் கேரள நாடெங்கும் புரட்சிப் புயலைக் கிளப்ப ஆரம்பித்து விட்டார்கள்.

கேரளம், கருநாடகம், தமிழகம், ஆந்திரம், இந்த நான்கு நாடுகளும் தனித் தனி நாடுகளாக அமைய வேண்டும். அப்படி அமையும் நாடுகள் நான்கும், உள்நாட்டுப் போக்குவரத்து, வெளிநாட்டு உறவு முதலிய சில பொது விவகாரங்களுக்காக ஒரு கூட்டாட்சியாக இயங்கி சமதர்ம ஆட்சியை நிறுவ வேண்டும்—இது நம்முடைய கருத்து.

கேரளம் மட்டும் தனி நாடாக இருந்து சமதர்ம ஆட்சியை நிலைநாட்ட வேண்டும்—இது கேரள சமதர்மக் கட்சியினரின் கருத்து.

இந்த இரண்டு கருத்துகளுக்கிடையே முரண்பாடு எதுவுமில்லை.

நாம், நம் நான்கு பேருக்குமாகச் சேர்த்து ஓரணா தேவை என்று கூறுகிறோம்.

அவர்கள் தங்களுக்கு மட்டும் காலணா தேவை என்று கூறுகிறார்கள்.

நாம் கேட்பது ஓரணா.

அவர்கள் கேட்பது காலணா.

நாம் கேட்கிற ஓரணாவை நாம் முதலில் பெற்றுவிடுவோமானால்,

(13-ம் பக்கம் பார்க்க)

நிராசை

[வியாபன்]

கையிலே விழுந்த பத்தணாவைக் குலுக்கிக் கொண்டே குடிசையை நோக்கி, நடையைக் கட்டினன் வேலப்பன். வீட்டுக் கூரை நிழலில் போட்டிருந்தக் கயிற்றுக் கட்டிலைத் தூக்கியபடி உள்ளே நுழைந்தான். செல்லம்மா, பாதி வெளிப்பு பெயர்ந்த பானைச் சட்டியில நீர் ஊற்றிக்கொண்டிருந்தாள். கட்டிலை கீழ வைத்து உட்கார்ந்தவன். "இந்தா, செல்லு! ஆறணா. கெடச்சுது! மூலைக்கடை மருதாச்சி கிட்டப் போயி வேண்டியதை வாங்கிட்டு வா" என்றான்.

இடுப்பில் குடத்தைத் தாங்கிக் கொண்டே, "உங்களுக்கு வெத்திலை வாங்கியாரட்டுமா?" என்று கேட்டவாறு அவன் கொடுத்த ஆறணாவைமுந்தானையில் முடிச்சிட்டுக் கொண்டாள் செல்லம்மா. "உம்; வேணும்" என்றவன் அவள் வெளியே செல்லும் வரைப் பார்த்துக் கொண்டிருந்தான். பின்பு எழுந்து. துருப்பிடித்த இரும்புச் சாமான்கள் போட்டுவைத்திருந்த மூலைப் பெட்டியைத் திறந்தான். அதற்குள்ளிருந்து ஒரு மண் உண்டியலை அவன் கைகள் துழாவி எடுத்தன. உண்டியல் கனத்தது. மீதமிருந்த நாலணாவை அதனுள் அவசரமாகப் போட்டுப் பெட்டியை மூடிவிட்டுக் கட்டிலில் வந்து சாய்ந்து கொண்டான் அவன்.

வீட்டுக் கொல்லைச் சுவற்றில் படர்ந்திருக்கும் அவரைக் கொடிக்குக் குச்சி குத்திக்கொண்டிருந்த மங்கம்மா, தந்தை வந்துவிட்டதை உணர்ந்து, வீட்டினுள் புகுந்தாள்.

"கொஞ்சம் தண்ணி கொடுக்கறையாம்மா?" என்றவுடன் சின்னவாளியொன்றில் நீர் மொண்டு வேலப்பனுக்குக் கொடுத்தாள் அவள்.

"இன்னிக்குச் சீக்கிரம் வந்துட்டியா, நீ?"

"ஆமாம்மா"

"பெரியப்பா இன்னும் கூலி கொடுக்கல்லியா?"

"இல்லே"

"மங்கம்மா, வெத்திலை வேணுமேடி, இப்போ!"

"நான் வாங்கியாரேன்!" என்றாள் ஆவலோடு.

"அட! காசிருக்கா?"

"இம்......"

"எவ்வளவு வெச்சிருக்கே?"

தலையை ஒதுக்கிவிட்டுக்கொண்ட மங்கம்மா, 'அதைப்பத்தி உங்களுக்கென்ன? வெத்திலைதானே வேணும்? இதோ, வந்துடறேன்!" என்று தனக்குள் சிரித்தவாறும் பாதையில் இறங்கி மறைந்தாள்.

வேலப்பனும் தனக்குள் சிரித்துக் கொண்டான்!" நல்ல பொண்ணும்மா" என்று முணு முணுத்துக் கொண்டே கட்டிலில் தலையைச் சாய்த்துப் படுத்துக் கொண்டான் அவன்.

மங்கம்மாவிடம் காசிருக்காது என்பது அவனுக்குத் தெரியும்! இருந்தாலும், அவள் வெற்றிலையுடன் வந்துவிடுவாள் என்பதும் அவன் அறியாததில்லை! மகள் கடைக்குத் துள்ளிக் கொண்டோடியதை நினைத்து மீண்டும் ஒரு முறை நகைத்தான் வேலப்பன்!

வேலப்பன் பருவம் வந்த மங்கம்மாவைக் கண்ணுசாமி முதலி வீட்டுக்கு வேலைக்காரியாக அனுப்பத் தயங்கவேண்டிய அவசியமிருக்கவில்லை. கருப்பட்டியில் அவர் 'வலுத்த கை' என்பதோடு கண்ணியம் மிக்கவர் என்பதற்கும் மாறு சொல்ல முடியாது. அப்படித் தவறு நேர்ந்துவிடும் என அஞ்சுவதற்கு வயதுப் பையன்களோ முறைகெட்ட வேலைக்காரர்களோ, கண்ணுசாமி வீட்டில் யாருமில்லை என்பது வேலப்பனுக்குப் பெரிய ஆறுதலளித்தது. அதோடு, வேலையும் கடினமானதில்லை. ஏதோ, துடைத்தல் கழுவலோடு மத்தியானத்தில் சின்ன முதலியாருக்கெனக் களத்திற்குச் சோறு கொண்டுபோக வேண்டும்; அவ்வளவுதான்.

அவள் நாள்தோறும் சாப்பாடெடுத்துச் செல்லும் வழியில் தானிருந்தது அந்த வெற்றிலைக் கடை, அதில் சுறுசுறு வென்ற முடியுடன் தலைவைத்த வெள்ளை உடை போட்டுக்கொண்டு தினமும் உட்கார்ந்திருக்கும் சின்னசாமி எத்தனையோ தடவை வேலப்பனின் கவனத்துக்கு உள்ளாகியிருக்கிறான். ஒன்றிரண்டு முறை சோறு எடுத்துச் செல்லும்போது வெற்றிலை வாங்கப் போய் அது தினப் பழக்கமாகி சின்னசாமி மங்கம்மா உள்ளத்தில் காதல் விதை தூவிவிட்டது. காசில்லாமல் அவன் வெற்றிலைப் பாக்குத் தானம் செய்வதையும் அவன் ஆசைப் பார்வை வீசுவதையும் வேலப்பன் முதலில் காணவில்லை. ஒரு நாள் அந்திபடும் வேளையில் கடைக்கு அனுப்பிவிட்டுச் சற்று நேரமாகியும் மங்கம்மா வராமல் போகவே, "போய் அழைத்து வருகிறேன்" என்று சென்றான் வேலப்பன். கலக்கத்தோடு வேகமாகச் சென்றவன் பெட்டிக்கடையை அடைந்தவுடன் திடுக்கிட்டு நின்றுவிட்டான். சிரித்து சிரித்து வாயாடிக் கொண்டிருந்த மங்கம்மாவைப் பிடித்து ஒரு 'பீடா'வை அவள் வாயில் திணிக்க முயன்று கொண்டிருந்தான் சின்னசாமி! அப்புறம் வேலப்பன் அங்கு ஏன் நிற்கப்போகிறான்! போன சுவடு தெரியாமல் வீட்டிற்குத் திரும்பினவனை "மங்கம்மா வரலே?" என்று பதட்டத்தோடு கேட்டாள் அவன் மனைவி. "தூரத்திலே வந்துட்டிருந்தாள். என்னைப் பார்த்துப் பயந்துடுவாளேன்னு நான் திரும்பி வந்துட்டேன்! பார்க்கலாமே உன் பொண்ணோட தைரியத்தை!" என ஒரு பெரும் பொய்யைச் சொன்னான் வேலப்பன்! தன் மகளைச் சின்னசாமி பத்திரமாக வீட்டுக்கருகில் கொண்டுவந்து சேர்ப்பான் என்பது அவனுக்குத் தெரியாதா, என்ன?

கொஞ்ச நேரத்தில் பொங்கும் மகிழ்ச்சியை அடக்க முயன்று கொண்டே உள்ளே நுழைந்தாள் மங்கம்மா. 'ஏனிவ்வளவு நேரம்மா?' என்று வேலப்பன் கேட்டான்.

"கடைக்காரரு எங்கேயோ போயிருந்தாரு! வர வரைக்கும் காத்துட்டிருந்தேன்!"

அவளுடைய சாமர்த்தியமான பதிலைக் கேட்ட வேலப்பன். "இச்சுச்சு!......ஒண்டியாவா நின்னுட்டிருந்தே!" என்றான் அனுதாபத்தோடு!

அன்றிலிருந்து வேலப்பன் பல முறைப் பரிசோதித்து விட்டான். சின்னசாமிக்கும் மங்கம்மாவுக்கு முள்ள தொடர்பு தெளிவாகத் தெரிந்துவிட்டது. அதைத் தண்டித்துத் தன் மகள் கண் கலங்கு வதை அவன் காண விரும்பவில்லை. வேலப்பனின் ஆவலெல்லாம் எப்படியாயினும் அவ்விருவருக்கும் மணம் முடித்துவிடவேண்டும் என்பதிலிருந்தது.

வேலைக்குச் சென்று வந்தக் களைப்பில் சோர்ந்திருந்த மங்கம்மாவை உற்சாகப் படுத்தவே அவன் இப்போது கையில் வெற்றிலைப் பாக்கிருந்தும் அவளைக் கடைக்கனுப்பினான்! சற்றைக் கெல்லாம இளந்தளிர்களாகக் கை நிறைய அள்ளிக் கொண்டு வந்தாள் அவள்!

"ஏது அம்மா இவ்வளவு!" என்றான் வேலப்பன் ஆச்சரியம் தாங்காமல்!

அவள் புன்முறுவலுடன், "இருந்தக் காசுக்கெல்லாம் வாங்கிட்டேன் அப்பா!" என்றாள்.

"கெட்டிக்காரி!" என்று அவன் சொன்னதின் அர்த்தம் மங்கம்மாவுக்கு எங்கே புரிந்திருக்கப் போகிறது?

அப்போதுதான் உள்ளே வந்த செல்லம்மாள், "நான் கேட்டதுக்கு வேண்டாமிங்களே! இப்போ என்னத்துக்குக் கொழுந்தையே அனுப்பி இத்தனை வெத்திலையை வாங்கிக் கொட்டிக்கிட்டு இருக்கிங்க?" என்றாள். அவளுக்கு ஒரு சிரிப்பைத்தான் பதிலாகக்கொடுக்க முடிந்தது வேலப்பனால்.

தன் மகளின் ரகசியத் தொடர்பை அவனும் ரகசியமாய் வைத்துக்கொள்ள விரும்பினான். செல்லம்மாவுக்குத் தெரிந்தால் விஷயம் அலங்கோலமாகிவிடும் என்பதோடு மங்கம்மாவுக்கு அவள் நடத்தையைத்தான் அறிந்திருப்பதாகக் காட்டிக்கொள்ள அவன் விரும்பவில்லை. மகளின் இருதயம் எப்படியிருக்கும் என்று அவனுக்குத் தெரியும் இன்று புத்திரவாஞ்சை நிறைந்து முக்கால் கிழவனாகிவிட்ட வேலப்பன் ஒருகாலத்தில் இந்தக் 'காதலி'ல் எல்லாம் கரை கண்டவன் தானே?

* * *

அப்பொழுது வேலப்பன் வாலிப முறுக்கிலிருந்தான். களத்திலிருந்து முதலாளி வீட்டுக்கு நெல்லைக் கொண்டு வந்து கொட்டும்போது அங்குக் கொல்லையில் அரிசி குத்திக் கொண்டிருக்கும் செல்லம்மாவைப் பார்த்து ஒரு புன்னகை புரிவான். அவள் மட்டும் பேசாமலிருப்பாள்? நொடி நேரம் மயக்கப் பார்வை வீசிவிட்டுத் தன் பட்டுப் பூச்சிக் கண்களைத் திருப்பிக் கொள்வாள். அவளை அடிக்கொருதரம் காண்பதற்காகவே வேலையைத் துச்சமென மதித்துத் துள்ளல் நடையுடன் அலட்சியமாக நெல்லை வாரிக் கொண்டுபோய்க்கொட்டும் அவனை முதலாளியே முதுகில் தட்டிக்கொடுப்பார்! வேலப்பனின் வேலைச்சாமர்த்தியத்தை எண்ணி மகிழ்ந்து போவார்! அவனுடைய நேர்மை உழைப்பைப் பற்றி அவருக்கு ரொம்பவும் பெருமிதம்! பாவம்! அவரென்ன கண்டார் வேலப்பனின் சுறுசுறுப்புக்குக் காரணத்தை!

ஜாதிக் குதிரை யென்பார்களே, அந்த மாதிரி தேகக் கட்டோடு மொழு மொழுப்பாயிருப்பாள் செல்லம்மா. அவளும் தன்னையறியாமல் வேலப்பனின் மேல் மனதைத் தளரவிட்டாள். வெறும் பார்வை சிரிப்போடு எத்தனை நாளைக் கடத்துவது? பொறுக்க முடியாமல் அவளே பேச்சைத் துவக்கி விட்டாள் ஒருநாள்.

"வெத்திலையிருந்தா தறீங்களா?" என்று அவள் தன் சிவப்பு அதரத்தைத் திறந்து கேட்டவுடன் வேலப்பனுக்கு ஆயிரம் வேலி நிலம் கையில் சிக்கினதைப் போலிருந்தது!

"வெத்திலை தானே? இதோ!" என்று முதலாளி ஒதுப்புறமாக வைத்திருந்ததையே எடுத்து நீட்டி விட்டான்!

வெட்கத்தோடு அவன் கையிலிருந்து அதை வாங்கிக் கொள்ளும் போது செல்லம்மாளின் உடல் துவண்ட துவளல்....!...அடடா!...

அப்புறம் என்ன? காதல் பெருகி அது கருகிப் போவதற்கு வழிவைக்காமல் சட்டுபுட்டென்று கலியாணத்தையே முடித்துவிட்டான் வேலப்பன்!

வெற்றிலைப் பாக்கால் தனக்குச் செல்லம்மா வந்து வாய்த்ததை நினைத்துக் கொண்ட வேலப்பன் மகள் கொண்டுவந்து கொடுத்தத் தளிர் வெற்றிலைகளை அடுக்கிய வாறு, "செல்லம்மா!" என்று செல்லமாகக் கூப்பிட்டான்.

கடைக்குப் போய் வாங்கி வந்த சாமான்களை எடுத்துக்கொண்டிருந்த செல்லம்மா கணவனின் அன்புக் குரலைக் கேட்டு எழுந்து வந்தாள்.

"உனக்குவெத்திலை வேண்டாம்? இந்தா வாயிலே போட்டுக்கோ!" என்றான் ஒரு மாதிரிப் பார்த்துக் கொண்டே!

"சரிதான் போங்க!" என்றவள் பார்வையைப் புரிந்துகொண்டவளாய்ச் சிணுங்கிவிட்டு, "அதுசரி மங்கம்மாவை இப்படிச் சும்மா நெடுமரமா விட்டு வச்சா எப்படி?" என்றாள் வருத்தத்தோடு.

அவன், "செஞ்சுடலாம்!" என்றான்!

"என்னவோ முடிஞ்சுட்டாப்போலே சொல்லிட்டிங்களே! பணக்காசு காரியமெல்லாம்.....?"

"எல்லாம் நடக்கும், செல்லு! நான் இருக்கச்சே மகளுக்கு நீ கொறைந்து போறே? நம்ம காரியமட்டா எல்லாந் தனி நேரத்திலே முடிஞ்சு போகுது!"

தாயும் தந்தையும் தன் கல்யாண விஷயமாகப் பேசிக்கொள்வதை மங்கம்மா நெஞ்சுதுடிக்கக்கேட்டுக் கொண்டிருந்தாள். அவள் மனம் நிலையில்லாமல் பரபரத்துக்கொண்டிருந்தது.

"ஆமாம். என்னவோ எல்லாத்தையுமே ஒழுங்காகச் சரிகட்டிட்ட மாதிரியிருக்கு! நீங்க பாத்த மாப்பிள்ளைதான் யாரு? சொல்லுங்க பாக்கட்டும்!"

வெத்திலைக் காம்பைக் கிள்ளி எறிந்துவிட்டுச் சுண்ணாம்பைத் தடவியவன் பெருமையுடன் செல்லம்மாவைப் பார்த்தான்! அந்தக் கம்பீரப்பார்வை வேலப்பனுக்கு இயற்கையானது. அதைக்கதவிடுக்கில் கவனித்த மங்கம்மாவுக்கு உதற லெடுத்தது. அடுத்தக் கணம் தன் தந்தை யாரைக் குறிப்பிடப் போகிறாரோ என அவள் பதைபதைத்தாள்.

உள்ளங்கையிலடங்கிய வெற்றிலையை வாயிலிட்டுவிட்டு, "எல்லாம் பாத்துட்டேன்! மாப்பிள்ளையை நீ 'ஆமா'ன்னு சொல்ல மாட்டே! மங்கம்மா கூட எதிர் வார்த்தைப் பேசமாட்டா!.....அட.. அவகிட்ட சொல்லக் கூடத்தேவையில்லேங்கறேன்!..." என்றவுடன் மங்கம்மாவின் கண்களில் நீர் கொட்டி விட்டது. ஓடிப்போய்த் தந்தையின் முன்பாக நின்று,

"நான் பொட்டிக் கடை சின்னசாமியைத்தான் கட்டிக்குவேன். வேறே மனுசனை கண்ணுலே கூடப்

(14 பக்கம் பார்க்க)

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் கேட்கிற காலணா அவர்களுக்குத் தானாகவே கிடைத்துவிடும். அதன் பிறகு அவர்கள் தங்கள் காலணாவுக்கென்று தனி முயற்சி செய்யத் தேவையில்லை.

ஒருவேளை அவர்கள் கேட்கிற காலணாவை அவர்கள் முதலில் பெற்றுவிட்டார்களானால், அப்போது நமக்கு நம்முடைய வேலையில் கால் பகுதி மிச்சமாகிறது. அதன்பிறகு நாம் ஓரணாவுக்காகப் பாடுபடத் தேவையில்லை எஞ்சியிருக்கும் முக்காலணாவுக்காகப் பாடுபட்டால் போதும்.

நாம் ஓரணாவைப் பெற்றுவிட்டால் அவர்களுடைய வேலை முற்றிலும் மிச்சமாகிறது.

அல்லது அவர்கள் காலணாவை அடைந்துவிட்டால் நம்முடைய வேலை கால்பகுதி மிச்சமாகிறது.

ஆகவே எப்படிப் பார்த்தாலும் அவர்களுடைய கோரிக்கையும் நம்முடைய கோரிக்கையும் ஒன்றிற்கொன்று இணங்கி நிற்பவையே தவிர பிணங்கி நிற்பவை அல்ல. ஒன்றுடன் ஒன்று உடன்பட்ட கிளர்ச்சிகளே தவிர முரண்பட்ட கோரிக்கைகளல்ல.

நாமும் அவர்களும் சந்தித்துப் பேசினால், பேசி நம்மை அவர்களும் அவர்களை நாமும் பரிபூரணமாக உணர்ந்து கொண்டால், நம்முடைய ஓரணா கோரிக்கையை அவர்கள் முற்றிலும் ஆதரிக்கும் நிலை ஏற்பட்டாலும் ஏற்படும்.

ஏற்பட்டாலும் என்று இழுத்தாற்போலப் பேசுவானேன். நிச்சயமாக ஏற்படும்.

நிச்சயமாக ஏற்படும். ஆனால் சிறிது காலம் செல்லும் அந்த நிலைமை ஏற்பட.

கேரள சமதர்மக் கட்சியின் மாநாடு, 18—5—'52 அன்று திருவனந்தபுரத்தில் நடைபெற்றிருக்கிறது.

அந்த மாநாட்டுக்கு வரும்படி நம்முடைய பொதுச் செயலாளர் அவர்களை அந்த மாநாட்டின் வரவேற்புத் தலைவர் அன்புடன் அழைத்திருந்தார்.

தன் உடல் நிலை காரணமாக மாநாட்டுக்கு வர இயலாமையைத் தெரிவித்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரதிநிதியாக **தோழர் தில்லை வில்லாளன் பி. ஏ. ஹானர்ஸ்** அவர்களை மாநாட்டுக்கு அனுப்பியிருந்தார் நம் பொதுச் செயலாளர்.

ஜான் மஞ்சூரியன், எம். பி. மேனன், சதானந்த சாஸ்திரி, பாஸ்கரன் நாயர், விவேகாநந்தன் தங்கப்பன் நாயர், சுகுமார் முதலான அக்கட்சித் தலைவர்களை வில்லாளன் அவர்கள் சந்தித்துப் பேசியிருக்கிறார்.

நம் பொதுச் செயலாளரை நேரில் காணவேண்டுமென்ற ஆவலை அவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

நம்முடைய பிரிவினை முழக்கத்தின் விவரங்களை நண்பர் வில்லாளன், அவர்களிடம் தெரிவித்திருக்கிறார்.

விரைவில் அவர்களுக்கும் நமக்குமிடையே ஒரு கூட்டுமுன்னணி ஏற்பட்டாலும் ஏற்படலாம்.

வட இந்திய ஆதிபத்யத்திலிருந்து தென்னாட்டை விடுவிக்க வேண்டும் என்கிற அடிப்படைப் பிரச்சினையில் நாம் இருவரும் பரிபூரணமாக ஒன்றுபட்டிருக்கிறோம்.

ஆனால் அத்தகைய விடுதலைப் போராட்டத்தில் கேரளப் பகுதியை மட்டும் நாங்கள் கவனித்துக் கொள்கிறோம் என்கிறார்கள் கேரள சமதர்மக் கட்சியினர்.

அதுமட்டும் போதாது! நான்கு பகுதிகளையும் ஒன்றாகக் கவனித்தால் நல்லது என்கிறோம் நாம்.

இந்த அளவுக்குத்தான் நமக்கும் அவர்களுக்குமிடையே வேறுபாடு இருக்கிறது. மற்றபடி வட இந்திய ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் அவர்களும் நாமும் ஒரே கருத்து உடையவர்களே.

“நாட்டு மக்களுக்கு நன்மையைக் கொடுக்காத வடநாட்டு காங்கிரசாட்சி நாட்டை நாசப் பாதைக்கு அழைத்துச் செல்கிறது. பரிதாபகரமான ஆட்சியால் பாதிக்கிறது கேரளம். இயற்கை வளம் நிறைந்த கேரளத்தின் இன்பமயமான வாழ்விற்கு ஏங்கிநிற்கும் மலையாள மக்கள் வடநாட்டாரின் அநியாயச் சட்டங்களால் அவதிப்படுகிறார்கள். நம்மை ஆளும் வடநாட்டுக் காங்கிரஸ் முதலாளி வர்க்கம் இந்தச் செய்கைக்கு ஒத்துழைக்கிறது. வடநாட்டு சர்க்கார் நம்மிடமிருந்து வரி என்ற பெயரால் பணத்தை வாங்கிக் குவித்துக் கொள்கிறது.”

18—5—'52 அன்று திருவனந்தபுரத்தில் நடைபெற்ற கேரள சமதர்மக் கட்சி மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் ஒரு பகுதி இது.

வடநாட்டாரின் ஏகாதிபத்ய வெறியாட்டத்தை எதிர்த்து எவ்வளவு ஆத்திரம் கொப்பளிக்கிறது பாருங்கள் கேரளர்களுக்கு!

தீர்மானம், மேலும் தெரிவிக்கிறது :—

“குஜராத்தி மார்வாடி முதலாளித்வ திட்டம் தான் இந்திய அரசியல் திட்டம் ஆதலால் கேரள மக்களாகிய நாம், நமக்காக நாமே ஒரு அரசியல்

திட்டத்தை வகுத்துக் கொள்ள வேண்டும்.

"இந்திய மொழி இந்நாட்டு மாணவர்களுக்குக் கட்டாய பாடமாக ஆக்கப்பட்டிருக்கிறது. ஆங்கில ஆதிக்கம் ஆங்கில மொழியைத் திணித்ததைப் போன்ற கதையே தான் இது. இந்த ஆரிய மொழியின் ஆதிக்கம் இங்கே தடை செய்யப்பட வேண்டும்.

"விசித்திரமான தேசிய உணர்ச்சியை இந்திய மக்களுக்கு ஊட்டியிருக்கிறது வட ஆதிபத்யம். குஜராத்தி—மார்வாடிகளின் வஞ்சக வலைக்குள் இந்திய மக்களை வீழ்த்துவதற்கான ஒரு தந்திரமேயாகும் இது.

" ஆகவே கேரளரான நம்மைப் பொறுத்தவரையில் சுதந்தர கேரளம் நிச்சயமாக நிறுவப்பட வேண்டும்......கேரளத்தை ஒரு சுதந்தர சமதர்ம அரசாக மாற்றுவதே நமது கடமை.'

புரட்சிகரமான சமதர்மக் கட்சி என்பது கேரள நாட்டிலுள்ள மற்றோர் அரசியல் கட்சி இந்தக் கட்சியின் சார்பில் டில்லி பாராளு மன்றத்தில் வீற்றிருப்பவர் தோழர் ஸ்ரீகண்டன் நாயர்

அவர், 3-6-52 அன்று, பாராளுமன்றத்தில் பேசுகையில்,

" தென்னாட்டார். தங்கள் மீது வடநாட்டார் ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருப்பதை இனி பேறும் சகித்துக் கொண்டிருக்க மாட்டார்கள், வட இந்திய மொழி தங்கள் மீது திணிக்கப்படுவதை அவர்கள் இறுதிவரை எதிர்த்தே தீருவார்கள்".

என்று புரட்சிப்புயல் எழுப்பியிருக்கிறார்.

ஆலப்புழை, கேரள நாட்டிலுள்ள ஒரு முக்கியமான நகரம்,

தேர்தலுக்கு முன்னால் பண்டித நேரு திருவாங்கூர் கொச்சி ராஜ்யத்திற்கு வந்திருந்தபோது அந்த நகருக்குள்ளும் நுழைந்து பார்த்தார்.

குஜராத்திகளே! கேரளத்தை விட்டு வெளியேறுங்கள்!
Gujarathis! Quit Kerala!

(5-ம் பக்கம் பார்க்க)

முகவூரில் பொதுக்கூட்டம்

நெடுஞ்செழியன் முழக்கம்

முகவூர் தி. மு. கழக சார்பில் 27-5-52-ல் திரு R. P. ஆதிநாராயணன் தலைமையில் இரவு 7 மணிக்கு ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் இரா. நெடுஞ்செழியன் M A. கூடியுள்ள நாலாயிரக் கணக்கான மக்களின் மத்தியில் நின்று சுமார் நான்கு மணி நேரம்வரை வீரமுழக்கமிட்டார். "அவைத்தலைவர் அவர்களே! அன்பு கெழுமிய தோழர்களே! தாய்மார்களே! உங்களுக்கு என் வணக்கம்." என்று ஆரம்பித்து திராவிட வளங்களைக் கூறி—திக்கெட்டும் உள்ள நாடுகளின் நிலை கூறி—திராவிட ஐக்கியக் குடியரசின் அமைப்புகளைக் கூறி—நாட்டுப் பிரிவின் அவசியங்களைத் தக்க ஆதாரங்களோடு விளக்கி, தி. மு. கழகக் கொள்கை, குறிக்கோள்—ஆகியவற்றைத் தெளிவுபடுத்தினர். மேலும் ஆச்சாரியார் ஆட்சிபீடமேறியதன் சூட்சமத்தை எடுத்துக் காட்டி" இந்த ஆச்சாரியார் முதலமைச்சராய் வந்தது பற்றியல்ல நாம் கண்டிப்பது—நாளை, அவர் வந்த வழியில் எத்தனை அயோக்கியர்கள் வருவார்களோ? என்றுதான் கண்டிக்கிறோம்" என்பதாகக் கூறும்போது, மக்கட்பெருங்கடல் கைமுழக்கம் செய்து வரவேற்றது. மக்கட் துரோகி மாணிக்கவேலர், என்று கூறுவதன் காரணங்களை விளக்கினர். "தேர்தலில் நமது கழகத்தார் மட்டும் மாணிக்கதேவரை ஆதரிக்கவில்லை. கம்யூனிஸ்டு உள்பட எல்லா முற்போக்குச் சக்திகளும் அவரையே ஆதரித்தன. ஏனெனில் காங்கிரசை எதிர்க்கிறார் என்று. ஆனால் மாணிக்கவேலர் காங்கிரஸ் மந்திரிசபையில் இடம் பெற்ற உடனே இவர்கள் எல்லாம் — தி. மு. கழகச் சுயேட்சைகளை ஆதரித்ததினால் இப்படியாயிற்று என்று—இப்பொழுது கேலி பேச வருதவறு. தி. மு. கழகமாவது மாணிக்கவேலர் ஓர் துரோகி என்பதை மக்கட்குக் காட்ட ஒப்பந்தப் பட்டயம் வைத்திருக்கிறது இவர்களுக்கு அதுவாவது உண்டா?" என்பதை மிக விளக்கமாக; தனக்கே உரித்தான தமிழ் நடையில் எடுத்துக் காட்டினர். பின் சில கேள்விகள் கேட்டு, தாள்கள் நீட்டப்பட்டது. அவைகளுக்குப் பதிலளிக்கையில், சீனாவிற்கும் திராவிடத்திற்கும் உள்ள சமுதாய ஒற்றுமையை, சீனச் சமுதாயம் திருந்தியதுபோல் நம் சமுதாயமும் திருந்த—அங்குபோல் சமுதாயப் புரட்சி தேவை என்பதையும்—அந்தப் புரட்சியை நாமே செய்வோம் என்பதையும், தக்க ஆதாரங்களோடு—மாற்றுக்கட்சி நண்பர்களும் மகிழும் வண்ணம் தெளிவுபடுத்தினர். "எந்தக் கட்சியாக—அதில் சேர்ந்தவராக இருந்தாலும், அரசியலில் கண்ணியத்தை வளருங்கள்" என்று வேண்டுகோள் விடுத்து, முடிவாக—"நாட்டுப் பிரிவினை—திராவிட விடுதலை நடந்தே தீரும். அதற்கான கும்பிலை ஆக்கிரத்தில்—கேரளத்தில்- அரும்பி விட்டது" என்றும், தேவி கலவர விபரத்தையும்-அதற்கான நடக்கும் வழக்கையும் கூறி நிதிகொடுக்கும்படி பொதுமக்களை வேண்ட, கழகத் தோழர்கள் உண்டியல் தூக்கிச் செல்ல ரூ. 12-9-0 சேர்ந்தது-என்பதையும் பொதுமக்கட்குக் கூறித் தன் பேருரையை முடித்துக்கொண்டார். பின் ஆதி நாராயணன் முடிவுரையாகச் சில வார்த்தைகள் கூறினர், இரவு 11-30க்குக் கூட்டம் வெற்றிகரமாக முடிந்தது.

இடையில். ஒருமணி நேரமாக மழை பெய்தும் கூட்டம் கலையாமல் இருந்தது குறிப்பிடத்தக்கது.

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

பாக்கமாட்டேன்!'' என்று கத்திவிட அவள் பதறினாள். ஆனால், முடியுமா அது? அவ்வளவு துணிச்சல் வரவில்லை மங்கம்மாவுக்கு. அவள் தலையைக் குத்திக் கொண்டு அடுப்பெதிரில் போய் உட்கார்ந்து கொண்டாள்.

அன்றைய இரவு நடுத்தூக்கத்தில் விழித்துக் கொண்ட வேலப்பன் மெல்ல எழுந்தான். அவன் மனம் இன்பத்தால் நிரம்பியிருந்தது. மகளும் மனைவியும் ஒரே சமயத்தில் திடுக்கிடப்போகத் தன் சாமர்த்தியத்தைக் காட்டப்போகிறோம் என்று நினைத்தவுடன் அவனுக்குப் பத்து வருஷத்துக்கு முந்தின தெம்பு வந்துவிட்டது! செல்லம்மாவுக்குக் கூடத் தெரியாமல் கலியாணக்காரியத்தை வகைப்படுத்திவிட வேண்டும் மாப்பிள்ளை சின்னசாமி வீட்டாரோடு பேச்சுவார்த்தை நடத்தி முடித்துவிட வேண்டும். பின்னால் திடீரென்று மங்கம்மாவிடம், ''உனக்கும் சின்னசாமிக்கும் தாண்டிக் கண்ணு, கல்யாணம்!'' என்று சொன்னால், அப்பப்பா! அவள் அடையப்போகும் ஆனந்தம்!— அதே மாதிரி, ''என் பொறுப்பெல்லாம் முடிஞ்சுது! எங்கே, கலியாணத்தை நடத்திடு பார்க்கலாம்! இந்தா பணம்!'' எனச் செல்லம்மாவிடம் உண்டியலைக் கொடுத்தால் அவள் கொஞ்சமாவா பூரித்துப் போவாள்?

வேலப்பன் மெதுவாய்க் கட்டிலிருந்து இறங்கி இரும்புப் பெட்டியைத் திறந்தான். மண் உண்டியை எடுத்துக்கொண்டுத் திரும்பவும் கட்டிலில் உட்கார்ந்தவாறு, சத்தம் செய்யாமல் வகையாகக் காசைக் கொட்டி எண்ணத் தொடங்கினான். ஐம்பத்தி மூன்று ரூபாய் ஒன்பதே காலணா! இது அவன் பல வருஷமாகச் சேர்த்தது. முழுசாக ஒட்டணா வொன்றை ஒரு தடவையாவது போட்டது கிடையாது! ஆனால் போட்டதில் கால்காசு எடுத்ததும் கிடையாது. செல்லம்மாவைத் திணற வைக்க வேண்டும் என்னும் ஒரே ஆர்வத்தில் எட்டுப் பத்து வருஷமாக அவளுக்குத் தெரியாமலேயே சேர்த்தான இந்தப் பணத்தை! அந்த ஆனந்தம் வரப்போகும் நாள் நெருங்கிவிட்டது. திடீரென்று பணத்தைக் கண்டு விடும் பூரிப்பு செல்லுவுக்கு! மங்கம்மாவுக்கு நினைத்து ஆசைப்பட்டவனே கையைப் பிடிக்கப் போகும் மகிழ்ச்சி!

தன் அதிர்ஷ்டத்தை எண்ணித் தானே ஒரு முறை நகைத்துக் கொண்ட வேலப்பன் பழையபடி உண்டியில் சில்லரையைப் போட்டு அதைப் பெட்டியினுள் வைத்து விட்டுத் திரும்பினான். வெகுவிரைவில் தன் மனைவி எப்படி முகம் மலரப் போகிறாள் என்ற ஆசைக்கனவுடன் அவன் அவளைப் பார்த்தான். அடுத்த நொடி, அவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது!........பக்கத்தில் படுத்திருந்த மங்கம்மா எங்கே?... சட்டென்று துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு வெளியே செல்லத் தயாரானவன், செல்லம்மாள் எழுந்தால் கத்திக் கதறி ஊரைக் கூட்டிவிடுவாள் என்று மங்கலாக எரிந்துகொண்டிருந்த விளக்கை ஊதி அணைத்து விட்டு தடதட வென்று பெட்டிக் கடையை நோக்கி நடந்தான்.

''சிசீ! இருந்தாலும் இவ்வளவு தூரம் விட்டுக் கொடுத்திருக்கக் கூடாது. என்ன தைரியம் இந்தப் பெண்ணுக்கு? நான் சாயந்திரம் பேசினதைத் தெரிஞ்சுகிட்டு அவன் கிட்ட சொல்ல ஓடிட்டா போல!... நல்லதுக்கு! சந்தோஷத்தை அதுக்குள்ளவா பரிமாறிக்கணும்?......'' என்று எண்ணமிட்டவாறு சென்றவன் வெற்றிலைக் கடைக்கு இப்பாலேயே பேச்சுக் குரலைக் கேட்டான் சற்றுத் தயங்கினான் வேலப்பன். எதிரே போய் நின்று இருவரையும் கலக்க வைப்பதை விட வீட்டுக்கே திரும்பிவிடலாம் என்று அவனுக்குத் தோன்றியது. மடமடவென்று திரும்பி வந்து விட்டான்.

படுக்கையில் சாய்ந்த வேலப்பனுக்குத் தூக்கமே வரவில்லை. எவ்வளவு நேரமாகியும் மங்கம்மாவைக் காணோம். கண்ணைப் பொத்தாமலிருந்தவன் கோழி கூவுவதற்கு முன்பே கலவரத்தோடு வெளியே கடையைக் கட்டினான்......பெட்டிக் கடை பூட்டிக் கிடந்தது! வேலப்பனுக்கு ஒன்றும் புரியவில்லை. அங்குமிங்கும் அலைந்தான். மூலைமுடக்கெல்லாம் சுற்றிப் பார்த்தான். எங்கெல்லாம் தேடியும், துப்பு துலக்காமல் போயிற்று.

சலித்துப் போய் வீடு திரும்பும் போது வீட்டில் பெரிய ஆர்பாட்டமாயிருந்தது. கொஞ்ச நேரத்தில் கருப்பட்டியே 'குபார்' கிளம்பிவிட்டது. வேலப்பன் பித்தனைப்போலத் தறிகெட்டு அலைந்தான். ''வேலப்பன் மக ஓடிப்போச்சாமே!......'' ''அட, அந்தச் சிறுக்கி, சின்னுசாமிக் கூடவா ஓடிப்போச்சு?'' என்பதைப் போன்ற அவச் சொல்லைக் கேட்கும்போது தலையைச் சுவற்றில் முட்டிக் கொள்ளத் தோன்றியது அவனுக்கு. செல்லம்மா வயிறு வயிறாக அடித்துக் கொண்டு கதறினாள். என்ன செய்தும் என்ன? போனவர்கள் போனதுதான்.

வெய்யில் மங்கிக் கொண்டிருந்த சமயத்தில் வேலப்பனின் வீட்டுக்கெதிரே மாட்டு வண்டியொன்று வந்து நின்றது, மரண வீட்டைப்போல அழுதக்கோலமாகக் கிடந்த குடிசை வீட்டுக்குள்ளிருந்து சற்று ஆசையோடு வந்து எட்டிப் பார்த்தார்கள் வேலப்பனும் செல்லம்மாவும். ''உன் மகளைப் பார்த்தோமம்மா, அப்பவே. இரும்பூராம் ரயிலிலே போயிகிட்டிருந்தாங்க. என்னமோ, பட்டணத்துக்குப் போறாங்களாம். போய்க் கடிதாசி போடறதா சொல்லிச்சு. அவ அப்பா யாரையோ அவளுக்குக் கல்யாணம் செஞ்சு வைக்கப் போறது அவளுக்குப் பிடிக்கவில்லையாம்...'' என்று அயலூரிலிருந்து வந்த பெண்ணொருத்தி செல்லம்மாவிடம் சொன்னவுடன் அவள் தலையில் அறைந்துகொண்டாள். இனி முயற்சி எடுத்துப் பயனில்லை என்பது தெரிந்து, இடிந்துபோய்த் தூணைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்து விட்டான் வேலப்பன்.

கொஞ்ச நேரம் சென்றது சந்தடி செய்யாமல் எழுந்தவன் உள்ளே சென்று மூலையிலிருந்த இரும்புப் பெட்டியைத் திறந்தான். விம்மிக்கொண்டிருந்த செல்லம்மா, அவனை ஒன்றும் விளங்காமல் பார்த்தாள். அவனுடைய கரங்கள் சட்டிபோலிருந்த எதையோ எடுத்தன. செல்லம்மாளின் வியப்பு அதிகமாகியது. வாய்த் திறக்காமல் வெளியில் நடந்த அவனைப் பிரமிப்புடன் பின் தொடர்ந்தாள் அவள். அவன் வேகமாக நடந்தான். நாலுத் தெரு தாண்டி அப்பாலிருக்கும் பாழடைந்த கிணற்றை நோக்கி அவன் செல்வதைக் கண்ட செல்லம்மாளுக்கு மயிர் சிலிர்த்தது. நெஞ்சு துடிக்க அவனை நெருங்கி விரைவாக நடந்தாள், வேலப்பன்

(16-ம் பக்கம் பார்க்க)

"கேரளத்திலே உரிமைப் போர்"

★

எங்கள் நாடு நீர்வளம் நிலவளம் நிரம்பியது. நாங்கள் பாதுகாப்பு மிகுந்த சகியமலையை எல்லையாகக் கொண்டவர்கள். அமெரிக்கா கேட்கும் அளவுக்கு இரசாயனப் பொருள்கள் நிரம்பியது எங்கள் நாட்டு மண். நாங்கள் நல் வாழ்வு வாழ நல்ல மிளகு ஒன்றே போதுமே. கடல் கடந்து வாணிபம் செய்ய நல்லதொரு துறைமுகமுண்டு எங்களுக்கு. தென்னைப் பயிர் மிகுந்தது எங்கள் நாடு. உலகிலே கயிற்று தொழிலில் முன்னேறியவர்கள் நாங்கள். ஆசியாவிலேயே கல்வி மிக்க நாடு எங்கள் நாடு. நாங்கள் தனியாக வாழமுடியும். வடநாட்டு பிர்லாக்களும், டாட்டாக்களும், டால்மியாக்களும் இனி எங்களைச் சுரண்ட முடியாது. மார்வாரிகளே! பணியாக்களே! நாட்டைவிட்டு வெளியேறுங்கள்.

இப்படி முழக்குகிறது கேரளம். புண்பட்ட மனதுடன், புத்துணர்ச்சி பெற்ற கேரள மக்கள் இன்று எழுப்பும் தங்கள் உரிமைக் குரல். இது புதுமையல்ல.

இதோ;

"வடநாட்டு மார்வாரி, குஜராத்திகளின் சோப்புத் தொழில் முன்னேற, அவர்கள் பணத்தோட்டத்தினருக்கு நான் சரிய இறக்குமதி வரியைக் குறைத்து இலங்கையிலிருந்து கொப்பரை (தேங்காய்) இறக்குமதி செய்து கேரளத்தின் கொப்பாரையின் விலையைக் குறைத்து உள்நாட்டு கொப்பரைவிற்கு மதிப்பில்லாமல் செய்து அத்தொழிலாளர்களின் பொருளாதார நிலையை மந்தமாக்கி, அவர்கள் வாழ வழியின்றிச் செய்திருக்கிறது, மத்திய அரசாங்கம்."

"வடநாட்டிலே பயிராகும் சணல், அத்தொழிலில் மத்திய பீடம் காட்டும் அக்கரை கேரளத்தின் கயிற்றுத் தொழிலின்மீது ஏன் காட்டுவதில்லை." என்று கேட்கிறது கேரள தினத்தாள் 'கௌமதி'. அதுவும் காங்கிரஸ் ஏடு! இலட்சக் கணக்கான மக்களின் மனதைக் கவர்ந்த கௌமதி—தேர்தலின்போது, மாட்டுப் பெட்டிக்கு தண்டியிட்ட கௌமதியின் ஆசிரியரான கார்த்திகேயனார் இன்று மிச்சமிருக்கும் மனிதத் தன்மையுடன் எழுதுகிறார் மேற்கூறியவாறு. அதுமட்டுமா அவர் தீட்டினார்?

"சென்னை மாகாணம், ஹைதராபாத், மைசூர், திருவிதாங்கூர்—கொச்சி, இவை நான்கும் பிரிந்து, கூட்டாட்சியாக இயங்கவேண்டும், இந்தியா என்ற சொல் அன்று பாகிஸ்தான் பிரிந்த போதே, செத்துவிட்டது. இன்று அப்படி அழைப்பதில் அர்த்தமில்லை என்கிறார் கார்த்திகேயனார்".

சாடல்ல 25—5—'52 கேரள கௌமதியில் காணும் கருத்துக்கள்! காங்கிரசிற்கு உழைத்த கார்த்திகேயர் இன்றுதான் உண்மையை உணர்ந்தாரா? இல்லை அன்றே தெரியும் கார்த்திகேயருக்கு காங்கிரஸ் என்றால் என்னவென்று. ஆனால் இன்று கேரளத்தின் நிலை... .... கேரள மக்கள் எழுப்பும் குரல்......இன்று கார்த்திகேயரின் குரலை—ஏன் கௌமதியின் குரலை மாற்றி இருக்கிறது. திராவிட நாட்டுப் பிரச்சினையை நாம் எழுப்பிய பொழுது, "ஆந்திர தேசம் ஆதரிக்கிறதா? கேரளம் கேட்கிறதா? கன்னடம் காது கொடுக்கிறதா?" என்று கையாண்டி பேசியவர்களுக்கு இன்று கேரளம் தன் பிரிவினை முரசினை முழுகுகிறது. கேட்டவர் காது செவிடுபடும்படியாக.

கேரள சமதர்மக் கட்சியின் பிரதிநிதிகள் மாநாட்டிலே, அக்கட்சியின் பிரதிநிதியும் பிரமுகருமான ஜான் மாஞ்சூடரான், எம். ஏ. எழுப்பிய சேவகக் குரல்.........

"இன்று கேரளம் தனித்திருந்தால், இலங்கையில் நம்மவர் வாக்குரிமையின்றி பரிதவிக்கும் நிலை ஏற்பட்டிருக்குமா? டட்லி சேனநாயகா நடு நடுங்கியிருக்க மாட்டாரா?"

தென்னாப்பிரிக்காவிலே மாலிசமானின் ஆட்சியிலே நம் தென்னாட்டுத் தோழர்கள் பரிதவிக்கும் நிலை கண்டும்—அன்று மலயாவிலே நம் கணபதி நாதியற்றுக் கயிற்றிலே தொங்கிய கொடுமையை நினைத்தும் இன்று ஏங்குகிறார் தோழர் மாஞ்சூடரான். ஏக்கம் எரிமலையாக மாறுகிறது கேரளத்திலே. வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் இரும்புப் பிடியிலிருந்து விடுபட எழுப்புகிறது தன் உரிமைக் குரலை.

18—5—'52 அன்று திருவனந்தபுரத்திலே நிகழ்ந்த கேரள சமதர்மக் கட்சியின் மாநாட்டிலே, சென்னையிலிருந்து வந்து கலந்து கொண்ட தி. மு. க. பிரதிநிதியான தோழர் நில்லைவில்லாளனைப் பார்த்து நண்பர் மாஞ்சூடரான் கூறினார்.

"கேரளம் பிரிவதில் உங்களது ஆதரவைத் தருவதாக மொழிந்தீர்கள். அதற்கு எங்களது நன்றி. உங்களது விடுதலைப் போருக்கான உதவியை நாங்கள் தர என்றுமே தயங்க மாட்டோம்."

இதுபோன்ற ஒத்துழைப்பு மனப்பான்மை கேரளத்தில் அலைமோதுகிறது. ஸி. பி. ஐயரின் ஆட்சியிலே, வயலார் புன்னப்புராவிலே நூற்றுக் கணக்கானவர்களை இயந்திரத் துப்பாக்கிகளுக்கு ஈந்தவர்கள் கேரளியர்கள். அவர்கள் உரிமைக் குரலை...சுதந்திர முழக்கத்தை—உணர்ச்சி வேகத்தைத் தடுக்க......எந்தச் சக்தியாலும் இயலாது......

சரித்திரத்தைப் படித்து—சுதந்திர வரலாற்றினைப் புரட்டிப் பார்த்து —வாழ்ந்த இனம் வீழ்ந்து பட்டபதைக் கண்டு — வடவெற்றேர் அவர்களை அடிமைப் படுத்துவதைப் பார்த்து இன்று கொதித்தெழுந்திருக்கிறார்கள் கேரள மக்கள் ......அவர்களது உணர்ச்சி மிக்க உள்ளத் துடிப்பிற்கு நமது நல்மலர்கள்.

போர்வாள்

சந்தா விவரம்

ஓராண்டு	ரூ. 6—8—0
6 மாதம்	ரூ. 3—4—0

போர்வாள் அலுவலகம்

181, பிராட்வே, சென்னை-1.

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

கிணற்றை நெருங்கியதும், அவனை யறியாமலேயே அவனின் அதரங்கள், "ஐயையோ!" என்று கூக்குரலிட்டன. அதே சமயம் வேலப்பனின் கையிலிருந்த பொருள் சலசலத்துக் கொண்டு பாழுங்கிணற்றுக்குள் விழுந்தது! அவன் திரும்பி வந்து செல்லம்மாளின் வாயைப் பொத்தினான். அவள் ஓரே நடுக்கமாக நடுங்கிக் கொண்டிருந்தாள். "எதுக்குப் பயப்படறே? உம் மவ மாதிரி உன்னை விட்டுட்டு நான் ஒண்ணும் செஞ்சுக்க மாட்டேன். நட, போலாம்" என்று அவளைக் கூட்டிக்கொண்டு திரும்பினான் வேலப்பன்.

"கிணத்துலே என்னத்தெபோட்டீங்க?"

"நம்ம குடியைக் கெடுத்த சனியனெப் போட்டேன்!"

"ஐயோ, எனக்கு ஒன்றுமே தோணலையே!"

"இதோ பாரு, சும்மா பொலம்பாதே. இனிமே நமக்கு ஒரு கவலையுமில்லையாது! நமக்கு விடிஞ்சு போச்சுடி, செப்னா!" என்றவாறு ஒரு கையால் அவளை இறுக அணைத்துக்கொண்டு அமைதியாக வேலப்பன் தன் குடிசைக்குள் நுழைந்தான்.

எல்லாம்

புதிய புத்தகங்கள்

தமிழகம் (அண்ணா) 1 0

பிளேட்டோ

அரசியல் அறிஞன் பிளேட்டோவின் வரலாறும் தத்துவங்களும் 1 0

எழிலரசி கிளியோபாட்ரா

நெஞ்சை அள்ளும் கருத்தோவியம் 1 8

சுழல்விளக்கு

(மு. கருணாநிதியின் கருத்துக் குவியல்) 1 0

துடிக்கும் இளமை

(மு. கருணாநிதி) இரண்டாம் பதிப்பு 0 6

பகுத்தறிவுப் பாசறை

131, பிராட்வே, சென்னை.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கும், தன்னுடைய சக்தி எவ்வளவு என்பதை உலகுக்கு உணர்த்துவதற்கும் போதுமான அளவு சக்தி அவருக்கு இருக்கிறது! ஆகவே அவருக்கு வரவிருக்கிற ஆபத்தைப் பற்றி நீர் கவலைப்பட வேண்டாம். பொதுமக்கள் உண்ண உணவின்றி வாடுகிறார்கள். விலைவாசிகளின் உயர்வால் வருந்துகிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டத்தால் தத்தளிக்கிறார்கள். அந்தத் துயரங்களைப் போக்க உம்மால் ஏதாவது செய்யமுடியுமானால் செய்யும். இல்லாவிட்டால் பேசாமல் பிரதம மந்திரி வேலையை உதறி எறிந்துவிட்டு, மகா பாரதம் படித்துக்கொண்டிரும். அதை விட்டுவிட்டு ஆண்டவனுடைய சக்தி எப்படிப்பட்டது என்பதை விளக்குவதற்காகப் பொது மக்களுடைய வரிப் பணத்தை வீணாக்கிக் கொண்டிருக்க வேண்டாம். ஆண்டவனுடைய சக்தியை நீர் சொல்லித்தானா இனி உலகம் தெரிந்துக் கொள்ளப் போகிறது! அது தான் அகில உலகத்துக்கும் ஏற்கெனவே தெரிந்த செய்தியாச்சே!

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ததாகவோ, தடை செய்ய வேண்டுமென்று கேட்டிருப்பதாகவோ தெரியவில்லை. அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக் கூடிய எதுவும் இந்நாடகங்களில் இருப்பதாக அங்கெல்லாம் யாரும் கூறவில்லை. அப்படியிருக்க, கரூர் நகரில் மட்டும் இந்நாடகங்கள் நடத்தப்படுவதை காங்கிரஸ் கட்சியினர் ஆட்சேபிப்பது விசித்திரமாக இருக்கிறது.

"ஸ்தல போலீசார், அரசியல் கட்சிகளிடையே பாரபட்சம் காட்டுவதாக எனக்குத் தோன்றுகிறது. அப்படிச் செய்வது வருந்தத் தக்கதாகும்.

"இனி ஏற்படப் போகும் சந்தர்ப்பங்களில் காங்கிரஸ் கட்சியில் உள்ள ரவுடிகளைக் கண்டுபிடித்து, அவர்களை நாடகத்திற்குப் போகாமல் தடுப்பது போலீசாரின் கடமையாகும். ஏனெனில் நாடகத்தை விரும்பாதவர்கள் அங்கு போகவேண்டிய அவசியமில்லை. இதர கட்சிகளுக்கு அளிப்பது போல மனுதாரர்களுக்கும் பாதுகாப்பளிப்பது போலீசாரின் கடமை."

* * *

ஜஸ்டிஸ் சோமசுந்தரம் அவர்களின் இந்த நல்ல தீர்ப்பைக் கண்ட பிறகாவது ஆட்சியாளர்கள் செந்தேன் நிறைந்த புட்டிமீது, "இது விஷம்—யாரும் தொடக் கூடாது" என்கிற அறிவிப்பை எழுதி ஒட்டுகின்ற தீய வழக்கத்தை விட்டுத் தொலைப்பார்களா?

நாடு கேட்கிறது இந்தக் கேள்வியை.

நாமும்தான் கேட்கிறோம். விட்டுத் தொலைப்பார்களா?

படிக்கவேண்டிய புத்தகங்கள்

திராவிடமென்றால் என்ன	0	6
ஆரியத்தால் விளைந்த கேடு	0	6
திராவிட இந்தியா	1	0
தமிழர் யார்	0	8
திராவிடர் நாகரிகம்	0	10
திராவிடம் பிரிந்தால் வாழுமா	0	8
பெண்கள் போராட்டம்	0	6
[illegible]ப்பேய்	1	0
சாபம் (இராதாமணாளன்)	1	0
உலகைத் திருத்திய உத்தமர்கள்	1	0
ரஸ்புடீன் ([illegible])	0	8
அந்தப்புரம் (வில்லாளன்)	0	12
மனப்போர் ,,	1	0
இலட்சியவாதி அழகிரி	0	5

பகுத்தறிவுப் பாசறை

131, பிராட்வே, சென்னை-1

Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras, Joint-Editor M. Ilanchaliyan B.A. (Hons.)